
# திருக்கோயில்




பிப்ரவரி 2004

விலை ரூ 7.00





சென்னை தீவுத்திடலில் சுற்றுலாப் பொருட்காட்சியில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ள நம் துறையின் எழில்மிகு அரங்கத்தை, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், நம் ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்களும் பார்வையிடுகிறார்கள். கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பிஎஸ்.சி. பிஎல். அவர்களும், சென்னை இணைஆணையாளர் திருமிகு ப. இராஜா பிஎஸ்.சி., பிஎல். அவர்களும் உடன் உள்ளார்கள்.



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 1000.00 |

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சுபானு - மாசி | மணி |
|---|---|---|---|
| 46 | | பிப்ரவரி 2004 | 2 |



சிறப்பாசிரியர்

**திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.**
ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.**

**"திருக்கோயில்" நிர்வாகக் குழுவினர்**

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திருமிகு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி,** பி.ஏ. பிஎல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி


<u>முகப்பு</u>

**சென்னை தீவுத்திடல் சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள நம் துறையின் எழில்மிகு அரங்கம்.**

## பொருளடக்கம்


ஆழ்வார்கள் அருளிய அருள்நெறி
- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்

திருமந்திர உபதேசம்
- திருமந்திரச் செம்மல் திருமிகு
டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

சிவராத்திரி மகிமை - முனைவர் த. அமிர்தலிங்கம்

பாடல் பெற்ற தலங்களும், திவ்விய தேசங்களும்

பாடல் பெற்ற தலம் — சிதம்பரம்
- பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன்

சோழ நாட்டு திவ்விய தேசங்கள் - நித்திலக்கோ

அம்மையப்பர் - டாக்டர் டி. செல்வராஜ்

பரமனடி காட்டும் கோதை தமிழ் - முனைவர் சீ. ரகு

மனதிற்கும் அறிவிற்கும் இடையே ஒரு
உரையாடல் - திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

மழை வேண்டும் தைப்பொங்கல்
- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

ஆரூர் திருக்கோயிலும் பதினெண்
இசைக்கருவிகளும்
- எம். விஜயரங்கதுரை



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:
உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
*119, உத்தமர்காந்தி சாலை, சென்னை - 600 034.*
தொலைபேசி: *28334811, 28334812, 28334813*

# ஆழ்வார்கள் அருளிய அருள்நெறி

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.

அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, பண்பாடு
மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

''ஏழ்பாரும் உய்ந்திடவே இன்னருளால் இங்குதித்த
ஆழ்வார்''

எனும் தொடரால் ஆழ்வார்களின் அவதார நோக்கத்தை நாம் நன்கு உணரலாம்.

''யானையைப் பிடிப்பார், யானையைக் கொண்டே
யானையைப் பிடிக்குமாப் போலே''

மனிதரைக் கொண்டே மனித சாதியரைத் திருத்த பரமபதத்திலுள்ள நித்திய சூரிகளை ஆழ்வார்களாக அனுப்பினார் பெருமாள்.

இவ்வாறு உயர்வற உயர்நலம் உடைய நாராயணரால் ஞாலமக்கள் உய்ய, மயர்வற மதிநலம் அருளப் பெற்று இம் மண்ணுலகிற்கு அனுப்பப்பட்ட ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர்.

அவர்களைப் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை ஆகிய ஆண்டாள், தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் என ஆன்றோர்கள் வரிசைப்படுத்துகிறார்கள்.

திருமாலின் கல்யாண குணங்களில் ஆழங்கால் பட்ட இந்தப் பன்னிரு ஆழ்வார்களும், உண்ணும் சோறு, பருகும்நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்றே வாழ்ந்து, ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னித் திருமாலுக்கு வழுவில் தொண்டாற்றிய அரும்பெருஞ் சான்றோர்கள் ஆவர்.

பன்னிரு ஆழ்வார்களில் காலத்தால் மிக முற்பட்டவர்களான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய இம்மூவரும் ''முதல் ஆழ்வார்கள்'' எனவே சிறப்பிக்கப்படுகிறார்கள்.

தாயின் வயிற்றில் கருவாகிப் பிறக்காமல் திருவெஃகாவில் தாமரை மலரில் ஐப்பசி மாதத்தில் ஓண நட்சத்திரத்தில் திருஅவதாரம் புரிந்தவர் பொய்கை ஆழ்வார், அதே ஐப்பசி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் கடல் மல்லையில் மாதவி மலரின்மேல் திரு அவதாரம் புரிந்தவர் பூதத்தாழ்வார். அதே ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் திருமயிலையில் ஆதி கேசவப் பெருமாள் திருக்கோவிலில் செவ்வல்லி மலரின்மேல் திருஅவதாரம் புரிந்தவர் பேயாழ்வார்.

வேறு வேறு புண்ணியத் திருத்தலங்களில், அடுத்தடுத்த நட்சத்திரங்களில் தோன்றிப் பற்பல திவ்விய தேசங்களைத் தரிசிப்பதில் ஆனந்தம் பெற்றுவந்த இந்நித்திய சூரிகள் பல்லாண்டுக் காலங்களுக்கு முன்பே

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''


என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்திருப்பதை இவர்களுடைய ஒப்பற்ற வரலாறு இவ்வுலகிற்கு உணர்த்துகின்றது.

''ஓங்கி உலகளந்த உத்தமன்'' திருக்கோயில் கொண்டுள்ள திருக்கோவிலூருக்கு வருகை புரிந்த இவர்கள் மிருகண்டு மாமுனிவருடைய ஆசிரமத்தில் சந்தித்துக் கொண்ட ஒரு அற்புத சம்பவம் ஆன்றோர்களைப் பெரிதும் கவர்ந்து விளங்கும் அரிய நிகழ்ச்சியாகும்.

அன்று இடியும் மின்னலுமாகப் பேய் மழை பொழிந்து கொண்டிருந்தது. மழைக்கு ஒதுங்க இடம் தேடிய இவர்கள், அருகில் மிருகண்டு மாமுனிவருடைய ஆசிரமம் இருக்கக் கண்டார்கள்.

ஆங்கிருந்த இடைகழியில் ஒருவர் படுக்க இடம் இருந்தது. முதலில் வந்த பொய்கையாழ்வார் அந்த இடைகழியில் சென்று படுத்துக் கொண்டார்.

அப்பொழுது இரண்டாவதாக வந்த பூதத்தாழ்வார் 'தமக்கு இடம் கிடைக்குமா?' என்று வினவ ''ஒருவர் உறங்கலாம். இருவர் அமரலாம், வாருங்கள்'' என்று



பூதத்தாழ்வாரை வரவேற்று அமர்த்திக் கொண்டார் பொய்கை ஆழ்வார்.

அப்பொழுது மூன்றாவது அங்கு வந்து சேர்ந்தார் பேயாழ்வார். ''ஒருவர் உறங்கலாம், இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம்'' எனக்கூறிப் பேயாழ்வாரையும் வரவேற்று ஏற்றுக் கொண்டனர்.

அம்மூவரும் இடைகழியில் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து நின்றிருந்த போது, மேலும் யாரோ ஒருவர் வந்து அவர்கள் மூவரையும் நெருக்குவதை அவர்கள் உணர்ந்தார்கள். அம்மூவரையும் அவ்வாறு நெருக்கியது பரம்பொருள் ஆகிய திருமால்தாம்.

முதலாழ்வார்களில் முதலாமவராகிய பொய்கை ஆழ்வார் நெருக்கும் பெருமாளை அறிந்து கொள்ளும் வகையாக இருள்நீக்க ஒரு விளக்கினை ஏற்றுவது போல் பாசுரம் ஒன்றைப் பாடியருளினார்.

''வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று.''

இவ்வாறு வைய விளக்கினைப் பொய்கை ஆழ்வார் ஏற்ற, பூதத்தாழ்வார் அன்பாம் விளக்கை ஏற்றினால் அகத்தின் உள்ளே நிற்பவரைக் கண்டு கொள்ளலாம் என்று அவரும் ஒரு பாசுரத்தைப் பாடியருளினார்.

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.''

இவ்வாறு பூதத்தாழ்வார் ஞானவிளக்கேற்ற திருமால் திருமகளோடு முதலாழ்வார் மூவருக்கும் திவ்விய தரிசனமே தந்து விட்டார். அத்திவ்விய தரிசனக் காட்சியைக் கண்டு பேயாழ்வார்

''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்ஆழி வண்ணன்பால் இன்று.''

என்று திருமகளோடு திருமாலைச் சங்கு சக்கரதாரியாகத் தரிசித்துப் பாடிப் போற்றுகின்றார்.

ஒருவர் உறங்கும் இடத்தில் இருவர் அமரவும் அல்லது மூவர் நிற்கவும், இருப்பதைப் பகிர்ந்து கொண்டால், அத்தகைய பரந்த உள்ளங்களைத் தேடிப் பரம்பொருளே வருவார் என்ற மெய்ப்பொருள் உண்மையை நமக்கு இந்த ''முதலாழ்வார்கள் வைபவம்'' நன்கு உணர்த்துகின்றது.

முதலாழ்வார்கள் மூவரும் நூறுநூறு பாசுரங்களைப் பாடிப் பரம்பொருளைப் போற்றியுள்ளார்கள். அம்மூன்று திவ்வியப் பிரபந்தங்களும் முறையே முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என வழங்கப்பட்டு வருகின்றன.

''மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னேவந் துதித்து
நற்றமிழால் நூல்செய்து நாட்டையுய்த்த - பெற்றிமையோர்
என்று முதலாழ்வார்கள் என்னும் பெரியவர்க்கு
நின்ற துலகத்தே நிகழ்ந்து.''

என்று ''உபதேச ரத்தினமாலை''யில் இவர்களைக் கொண்டாடுகின்றார் ஸ்ரீமணவாள மாமுனிகள்.

''முதலாழ்வார்கள்'' வாழ்ந்திருந்த காலத்திலேயே தோன்றி, முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வாரால் வைணவ சமயத்திற்கு ஆட்கொள்ளப் பெற்றவர் தாம் திருமழிசை ஆழ்வார். இவர் அருளிச் செய்தன 96 பாசுரங்கள் கொண்ட ''நான்முகன் திருவந்தாதி'' மற்றும் 120 பாசுரங்கள் கொண்ட ''திருச்சந்த விருத்தம்'' ஆகும்.

இவர் காஞ்சிபுரத்தை ஒட்டியுள்ள திருவெஃகா திருத்தலத்திற்குச் சென்று அங்கேயே தங்கியிருந்து திருவெஃகா திருவரவணைப் பெருமானுக்குப் பல்லாண்டுக்காலம் தொண்டு புரிந்து வாழ்ந்து வந்துள்ளார்.

அப்பொழுது பெருமாளுக்குத் திருவலகிடுதல் முதலான தொண்டுகள் புரிந்து வந்த, பருவம் முதிர்ந்த கிழவியைத் தம் திருவருள் திறத்தால் குமரியாக்கி அற்புதம் செய்துள்ளார்.

பின் அக்குமரியை அந்நகரையாண்ட பல்லவ மன்னன் திருமணம் செய்து கொண்டு, திருமழிசை ஆழ்வார் தந்த வரத்தால் அவள் என்றும் மாறா இளமைப்பருவம் பெற்றிருப்பதை உணர்ந்து, தன்னையும் அதுபோல் மாறா இளமையுள்ள வாலிபன் ஆக்க வேண்டியுள்ளான்.

திருமழிசை ஆழ்வாரின் சீடரான கணிகண்ணன் இதற்குத் திருமழிசையாழ்வார் உடன்படார் என மறுத்துக் கூற, அவரை நாடு கடத்தி உத்திரவிட்டான் பல்லவ மன்னன்.

இதனை அறிந்த திருமழிசையாழ்வார் திருவெஃகா பெருமானின் திருவடி தொழுது

''கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.''

என்று வேண்டிப் பாடினார். திருமழிசையாழ்வார் சொன்னவண்ணமே பெருமான்தம்யோக நித்திரையை விட்டு எழுந்து அரவணைப்பாய்ச் சுருட்டிக்கொண்டு வர, அவ்வூரைவிட்டு அருகில் உள்ள ஓரிடத்திற்குச் சென்று அங்குதங்கி அவ்விரவைக் கழித்தனர்.

''பெருமான் கோயிலில் இல்லை'' என அறிந்து மன்னன் மறுநாள் காலை திருமழிசையாழ்வாரைத் தஞ்சமடைந்து தன்னை மன்னித்து மனமிரங்கி ஊருக்குத் திரும்புமாறு பணிந்து வேண்டினான்.

மன்னனை மன்னித்த திருமழிசையாழ்வார் பெருமாளை நோக்கி

''கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் - துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்.''

என்று பாடி வேண்ட, எம்பெருமானும் அதற்கு உடன்பட்டு திருமழிசையாழ்வாரும் கணிகண்ணனும் உடன்வர மீண்டும் திருவெஃகாலிற்கு எழுந்தருளினார்.

இவ்வாறு திருமழிசையாழ்வார் சொன்ன வண்ணமே செய்தபடியால் திருவெஃகாப் பெருமாளுக்குச் ''சொன்ன வண்ணம் செய்த பெருமாள்'' என்று திருநாமம் இன்றும் வழங்கிவரக் காணுகின்றோம். திருமழிசை ஆழ்வாரும் கணிகண்ணனும் பெருமாளுடன் சென்று ஓரிரவு தங்கியிருந்த ஊர் ''ஓரிரவிருக்கை'' என இன்றும் வழங்கிவரக் காணலாம்.

இறையன்பர்கள் இருக்கும் இடமே இறைவன் இருக்கும் இடம் என்பதை இவ்வினிய வரலாறு நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இறையடியார்கள் இறைவனுக்கு அன்றி அரசர்களின் அதிகார ஆணவத்திற்கு அஞ்சிடார் என்பதையும் இவ்வினிய வரலாறு நமக்கு நன்கு உணர்த்துகின்றது.

''வாழ்த்துகவாய் காண்ககண் கேட்கசெவி மகுடம்
தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால் - சூழ்த்த
துழாய்மன் னுநீண்முடி என்தொல்லை மால்தன்னை
வழாவண்கை கூப்பி மதித்து''

என்று மகுடமாமன்னர்களும் திருமாலையே வாழ்த்தி உய்ய வேண்டும் என்று திருமழிசையாழ்வார் இப் பாசுரத்தில் உணர்த்துகின்றார்.

''நாக்கொண்டு மானிடம் பாடேன்''

என்று மனிதர்களைப் பாடி வாழ்தலை வைகின்ற நம் திருமழிசை ஆழ்வார்

''தொழில் எனக்குத் தொல்லைமால் தன்நாமம் ஏத்த
பொழுதெனக்கு மற்றுதுவே போதும்''

என்று இறைவனையே பாடி உய்ய வேண்டும் என்று வையத்தார்க்கு இனிதே அறுவுறுத்துகின்றார்.

''என்றுமறந் தறியேன் என்நெஞ்சத் தேவைத்து
நின்றும் இருந்தும் நெடுமாலை - என்றும்
திருவிருந்த மார்பன் சிரீதரனுக் காளாய்
கருவிருந்த நாள்முதலாக் காப்பு''

என்பதில் அமைந்துள்ள ''கருவிருந்த நாள்முதலாக் காப்பு'' எனும் தொடர் என்றும் நாம் உளத்தில் கொள்ள வேண்டிய அற்புதக் கருத்தாகும்.

பாண்டிநாட்டில் தாமிரபரணி நதிக்கரையில் உள்ள திருநகரி என வழங்கும் திருக்குருகூரில் திரு அவதாரம் புரிந்த நம்மாழ்வார் வரலாறு ஒரு அற்புத மான வரலாறு ஆகும்.

வேளாளர் குலத்தில் பொற்காரியார் - உடைய நங்கையார் தம்பதியரின் திருமகவாக வைகாசி விசாகத்தில் திருஅவதாரம் புரிந்த நம்மாழ்வார் பிறந்த நாள்முதலாக அழுதல், பால் உண்ணுதல் முதலான செயல் ஒன்றும் இல்லாது இருந்த அதிசயத்தைக் கண்டு வியப்புற்ற அவர்தம் பெற்றோர்கள் குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாளில் திருக்குருகூர் பொலிந்து நின்ற பிரான் சந்நிதியின் அருகிலிருந்த திருப்புளிய மரத்தின் அடியில் விட்டு விட்டுச் சென்று விட்டார்கள்.

பதினாறு வயது வரையும் எந்தவித உலக நாட்டமும் இன்றி உண்ணுதல் ஒழிந்து தியானத்திலேயே வளர்ந்த இத்தெய்வீகக் குழந்தையை உலக இயல்புக்கு மாறானவர் என்பதால் ''மாறன்'' எனவும், சடமாகிய உலகச் செயல்களைக் கோபித்தவர் என்பதால் ''சடகோபர்'' எனவும் மக்கள் திருநாமம் சாற்றி அழைத்து வியப்புற்றனர்.

இவ்வாறு பதினாறு கலைகளும் நிறையப் பெறும் முழுமதி போலப் பதினாறு ஆண்டுகள் நிரம்பி, உறங்காப் புளி நிழலில் பத்மாசனம் கொண்டு, பரம் பொருளைத் தியானம் செய்து கொண்டு ஞான நிட்டையில் வீற்றிருந்த இவரை வடநாட்டுத் தலயாத்திரையில் ஈடுபட்டிருந்த மதுரகவியாழ்வார் தெற்கில் ஒரு ஜோதி தோன்றி ஒளிவீசக் கண்டு, ஒவ்வொரு இரவும் அச்சோதி வரும் திக்கிலே பயணம் தொடர்ந்து வந்து திருப்புளி ஆழ்வார் அடியில் வீற்றிருந்த இத்தெய்வக் குழந்தையைக் கண்டு, ''இக்குழந்தைக்கு உணர்ச்சி உளதோ? இலையோ?'' என்று அறியும் பொருட்டு ஒரு சிறுகல்லை எடுத்து இவர்முன் இட்டார்.

நம்மாழ்வார் திருக்கண்களை விழித்துப் பார்த்து அருள, ''இக்குழந்தையால் பேச இயலுமோ? இயலாதோ?'' என அறியும் வண்ணம் ''செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடைக்கும்?'' என்று வினவினார்.

நம்மாழ்வாரும் முதன்முதலாக திருவாய் மலர்ந்து ''அத்தைத் தின்று அங்கே கிடைக்கும்'' என்று விடையருளிச் செய்தார். அதனைக் கேட்டு அகம் மகிழ்ந்த மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வார் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து ''என்னைச் சீடராக ஏற்று அடியேனுக்குத் தத்துவ இத, புருசார்த்தங்களை விளக்கியருளுதல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

திருப்புளியாழ்வார் திருநிழலில் வீற்றிருந்த நம்மாழ்வாரும் மதுரகவி ஆழ்வாரைத் தம் சீடராக ஏற்றுக் கொண்டு அருளினார்.

நூற்றெட்டு திவ்விய தேசங்களிலும் எழுந்தருளியுள்ள திருப்பதி எம்பெருமான்கள், திருப்புளியடியில் எழுந்தருளியிருந்த சடகோபருக்கு அவர் வீற்றிருந்த இடத்திற்கே எழுந்தருளிக் காட்சி கொடுக்க, இறைவன் திவ்விய அழகிலும், குணங்களிலும் ஈடுபட்டு அனுபவித்த சடகோபர், திருப்புளிய மரத்தடியில் வீற்றிருந்தவாறே 108 திவ்விய தேசங்களையும் பாடிக்கொண்டாடினார்.

ரிக், யஜுர், அதர்வணம், சாமம் எனும் வடமொழி நான்கு வேதங்களின் சாரத்தையும் முறையே திரு

விருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழியாக அருளிச் செய்து அவற்றை மதுரகவியாழ்வாருக்கும் உபதேசித்தருளினார் நம்மாழ்வார்.

''உண்டோ வைகாசி விசாகத்துக் கொப்பொருநாள்?
உண்டோ சடகோபர்க் கொப்பொருவர்? - உண்டோ
திருவாய்மொழிக் கொப்பு? தென்குருகைக் குண்டோ
ஒருபார் தனில்ஒக்கும் ஊர்?''

என்ற ''உபதேச ரத்தினமாலை'' வெண்பா நம்மாழ்வாரின் ஒப்பற்ற சிறப்பினை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

நம்மாழ்வார் அருளிய ''திராவிட வேதம்'' ஆகிய அவர்தம் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி ஆகியவற்றில் சமய சமரசக் கருத்துகள் பரவியிருப்பது நாம் உணர்ந்து கொண்டாடத்தக்க அருங்கருத்தாகும்.

''அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே''

''வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபலவாக்கி அவை
அவை தோறும்
அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்திப் பரப்பி
வைத்தாய்
இணங்குநின் னோரை இல்லாய் நின்கண் வேட்கை
எழுவிப்பனே''

ஆகிய நம்மாழ்வார் பாடல்கள் அவர்தம் சமயசமரச உணர்வை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

சாதிச் சிறுமைகளைச் சாடும் நம்மாழ்வார், திருமால் அடியார்கள் யாவரும் ஒரே சாதியினர் என்று நமக்கு அறிவுறுத்தும் அருமையான பாடல்களில் ஒன்று கீழ்வரும் பாடல் ஆகும்.

''குலம் தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற்
காளென்று உள்
கலந்தார் அடியார் தம்அடியார் எம்அடிகளே.''

மானிடர்களைப் பாடாது திருமாலையே பாடி உய்யவேண்டும் என்று மாநிலத்தாருக்கு அறிவுறுத்துகின்ற நம்மாழ்வாரின் அரியபாடல்கள் பின்வருவனவாகும்.

''சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன்
கேண்மினோ
என் நாவிலின் கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா தெனா வென்று வண்டுமுரல் திருவேங்கடத்து
என்னானை என்அப்பன் எம்பெருமான் உளனாகவே.''

''என் ஆவது எத்தனை நாளைக்குப் போதும்
புலவீர்காள்!
மன்னா மனிசரைப் பாடிப்படைக்கும் பெரும்பொருள்
மின்னார் மணிமுடி விண்ணவர் தாதையைப்
பாடினால்
தன்னாகவே கொண்டு சன்மஞ் செய்யாமையும்
கொள்ளுமே''

''வம்மின் புலவீர் நும்மெய் வருத்திக் கைசெய்துய்ம்
மினோ
இம்மன்னுலகினில் செல்வர் இப்போதில்லை நோக்கி
னோம்
நும்மின் கவிகொண்டு நும்நும் இட்டாதெய்வம்
ஏத்தினால்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே.''

இவ்வாறு ஞாலம் உய்ய வழிகாட்டிய நம்மாழ்வார் பெருமானை ''மாசில் உபதேசம் செய்மாறன்'' ''அன்பிலா மூடரை நிந்தித்தும் மொழிந்தருளும் மாறன்'' ''உலகில் திருந்தாதார் தம்மைத் திருத்திய மாறன்'' ''மண்ணவர்க்குத் தான் உபதேசிக்கை தலைகட்டினான் மாறன்'' என்று போற்றிக் கொண்டாடுகின்றார் மணவாள மாமுனிகள்.

நம்மாழ்வாரைப் போற்றும் வகையில் ''திருவாய்மொழி நூற்றந்தாதி'' என நூறு வெண்பாக்களால் ஆன நூல் மாலையையும் மணவாளமாமுனிகள் செய்திருப்பது நாம் அறிய வேண்டிய ஒன்று.

''ஒழிவிலாக் காலம் உடனாகி மன்னி
வழுவிலா ஆட்செய்ய மாலுக்கு - எழுசிகர
வேங்கடத்துப் பாரித்த மிக்கநலம் சேர் மாறன்
பூங்கழலை நெஞ்சே புகழ்''

*(திருவாய்மொழி நூற்றந்தாதி 23)*

என்று நாமும் நம்மாழ்வார் பெருமானைப் போற்றிப் புகழ்ந்திடுவோமாக.

★★★

# திருமந்திர உபதேசம்

— "திருமந்திரச் செல்வர்"
திருமிகு டி.வி. வெங்கட்டராமன் இ.ஆ.ப. அவர்கள்

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கை ஒன்று உண்டு. இப்பிறவிக்குப் பிறகு வேறு ஒரு பிறவி இல்லை என்பது இக்கொள்கையின் கூறுகளில் ஒன்றாகும். எனவே, காற்று உள்ளபோதே தூற்றிக்கொள் என்றபடி, இயன்றவரை எல்லா இன்பங்களையும் இப்பிறவியிலேயே துய்த்துவிட வேண்டும் என்பது மற்றொரு கூறாகும். இங்கே உயிர் என்பதற்கு இடம் கிடையாது. கடவுளைப் பற்றிய தெளிவும் இல்லை. முற்காலத்தில் இக்கொள்கைக்கு உலகாயதம் என்று பெயர் வைத்திருந்தார்கள். இக்கொள்கை வழி வாழ்க்கையை நடத்திச் செல்பவர்களை உலகாயதர்கள் என்றும் அழைத்தார்கள்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி உலகத்தில் பெரும்பான்மையான மக்களை உலகாயதர்களாக்கி விட்டது. பொருட் செல்வத்திற்கு மேலான செல்வமில்லை என்ற ஒரு போக்கு வாழ்வதற்கான நெறிகளுக்கு ஒரு புதிய இலக்கணத்தைத் தொகுத்து அமைத்துவிட்டது.

நான் இறந்தபோது மண்ணோடு மண்ணாகி விடுவேன் என்ற எண்ணத்தில் ஊன்றியிருக்கும்போது, அங்கே சீவனுக்கோ, சிவனுக்கோ இடமில்லை. அவரவர்களுடைய வினைகளுக்கேற்ப, இறப்பும், பிறப்பும் மாறிமாறி வரும் என்பதும், இந்தச் சூழலில் அகப்பட்டு திணறுவது சீவன் என்பதும், சீவனுடைய குறைபாடுகள் நீங்கினால், சீவன் தன்னிலை விளக்கம் பெற்று, தன்னுடைய தலைவனைப் பற்றிய ஞானங்கள் எல்லாம் பெற்று, உய்தியடைந்த நிலையில் ஒப்பிலாத இன்பத்தைத் துய்த்து வாழலாம் என்பதும் ஏற்கப்படுவது இல்லை.

உலகத்தைப் பற்றி நின்று, உடலோடு சம்பந்தப்பட்ட பொறிகள் புலன்களால் உந்தப்பட்டு, பெறும் அனுபவமே உண்மையானது என்ற கொள்கையில் நிற்கும் மனிதர்களுக்கு எது மெய், எது பொய் என்று எடுத்துக்காட்டி, பொய்யை நீக்கி, மெய்யைப் பற்றிக் கொள்ள வேண்டி நெறிகளைச் சுட்டிக்காட்டி, அந்த நெறிகளை மேற்கொள்ளச் செய்து, படிநிலை வளர்ச்சியை முழுமையாகப் பெறவைப்பது திருவருளேயாகும். திருவருளை முழுமையாக உணர்ந்து, திருவருளில் மூழ்கித் திளைத்து நிற்பவர்கள் அருளாளர்கள் ஆவார்கள். புறத்திலும் அகத்திலும் இறைவனைக் கண்டு அனுபவிப்பவர்கள் அருளாளர்கள். நாமெல்லோரும் உய்திபெற, அமைதியுடனும் இன்பத்துடனும் வாழ, அருளாளர்கள் நம் முன் வைக்கும் கொள்கைகள் வேறு.

பிறப்பு என்பது வாழ்க்கையின் தொடக்கம் என்றும், இறப்பு என்பது அதன் முடிவு என்றும் நாம் கருதுவதை அருளாளர்கள் தவறு என்கிறார்கள்.

பிறப்பு. யார் பிறந்தது? உடலா, உள்ளமா, உயிரா? அல்லது, இவை மூன்றும் ஒருசேர வந்த தோற்றமா? உலக அனுபவ வழிவந்த நெறியின் மூலம், இதற்கு சரியான விடை கிடைக்காது. இங்கே ஒரு இருள் நிலை. இதைச் சான்றோர் அறியாமை என்றார்கள். இதனை மாயம் என்பார் திருமூலர்.

"இட்டான் அறிந்திலன் ஏற்றவன் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க்கு உரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மை எவ்வாறே!"

திருமந்திரம், முதல் தந்திரம்

பிறப்பின் உண்மையை நம்மிடமிருந்து மறைத்து வைப்பது சிவப் பரம்பொருளாகும். அவனுடைய திரோதன சக்தியே இதற்குக் காரணமாகிறது. இறைவன் இதைத் தன்னிச்சையாகச் செய்யவில்லை. இங்கும் ஒரு நோக்கம் அமைகிறது. உயிர்கள் தத்தம் முயற்சியால் வினைப்பயன்களைத் துய்த்து, இன்ப, துன்பங்களை அனுபவித்து, உய்திபெற வேண்டும் என்பதே அந்த நோக்கம். அந்த நோக்கத்தை, ஓரளவு உயிரின் அறிவு வளர வளர மறைத்து வைப்பது இறைவனின் மறைப்புச் சக்தி திரோதான சக்தி ஆகும்.

பிறப்பைப் போலவே, இறப்பும் புதிராக உள்ளது. இறப்பு என்பது உடல் அழிவை உணர்த்துகிறது. உடலும் கருவிகளும் நிலையற்றவை என்பது தெளி

வாகிறது. ஆனாலும், உடலைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்ற கொள்கையில் நிற்கும்போது இறப்பு ஒரு பெரும் அச்சத்தைத் தருகிறது. மேலும் இறப்பு என்பது எப்போது வரும் என்ற தெளிவு இல்லாததால், இந்த அச்சம் வலுவடைகிறது. அப்போது, நமக்கு அப்பாலுள்ள ஒன்றை நாடி, நமக்கு துணை புரிய வேண்டுமென்று, நம்முடைய உள்ளம் பலவகைகளிலும் அலைந்து திரிகிறது.

''புலனைந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி
அறிவபழிந்திட்டுஐம் மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள் செய்வான் அமருங்கோயில்''

திருஞான சம்பந்தப் பெருமான் திருவையாற்றில் நமக்கு ஒரு வழியைக் காட்டித் தருகிறார். ''அஞ்சாதே'' என்று ஒரு ஒலி எழும் இடம் சிவபெருமான் அமர்ந்திருக்கும் திருக்கோயில் அல்லவா! அங்கே சென்று நாம் சரணடைய வேண்டாமா? என்று நம்மைக் கேட்பார் திருஞானசம்பந்தர் பெருமான்.

நாம் பிறப்பது எப்படி என்று தெரியவில்லை. இறப்பது எப்படி, எப்போது என்றும் அறிய இயலவில்லை. இறந்தபின் நம்முடைய நிலை என்ன என்று கற்பனை செய்வதற்கும் இடமில்லை. ஆனாலும் இவற்றையெல்லாம் அறிந்து கொள்ள சாத்தியக் கூறுகள் உண்டு. இவை எளிதானவை. பெரிய முயற்சிகள் தேவையில்லை.

இறைவனை மனதில் வைக்க வேண்டும். அவனுடைய திருநாமத்தின் புகழைப் பாடி நிறைவு பெற வேண்டும். இறைவன் திருவடிகளில் பன்மலர்களைத் தூவிப் பாட வேண்டும். மனம், வாக்கு, காயம், இவை மூன்றாலும் தங்களை இறைவனிடம் ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் எல்லா நற்பயன்களையும் பெறலாம் என்பார் சீர்காழிப் பிள்ளையார்.

''நீ நாளும் நன்னெஞ்சே நினைக்கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ் நாமஞ்செவி கேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே''

(இரண்டாம் திருமுறை: திருச்சாய்க்காடு)

சிவபெருமானைப் பணிந்து, புகழ்ந்து, நாடுவதைத் தவிர தான் வேறொன்றும் அறிந்திருக்கவில்லை என்பார் திருமூலநாயனார்.

''சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று
பரமென் பன்மலர் தூவிப் பணிந்து நின்
நாடுவன் ஆடி அமரர் பிரான் என்று
நாடுவன் யானின் றறிவது தானே''

(திருமந்திரம், பாயிரம், கடவுள் வாழ்த்து)

இறைவனை அடையும் வழியைத் தெரிந்து கொண்டு, அவ்வழிச் சென்று, இறைவனைக் கண்டறிந்து, தங்களுடைய உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் இறைவன் திருவடிகளில் அர்ப்பணித்து, இறைவன் திருவடியை மறவாது நினைத்து வாழ்பவர்கள் அருளாளர்கள். அவ்வகையில், அவர்கள் பெறும் பயன் அவர்களை இம்மையையும், மறுமையையும் கடந்தவர்களாக, சிவானந்தப் பெரும்பேற்றில் திளைத்தவர்களாகச் செய்கிறது.

நம்மைப் பொறுத்தவரை, அங்கே ஒரு தடை எதிர்நோக்கி நிற்கின்றது. கற்றவர்களானாலும், கேட்டவர்களானாலும், இந்தத் தடையை நீக்க இயலவில்லை. இந்தத் தடையே, திருநாவுக்கரசர் பெருமான் சமணம் புகுவதற்கு காரணமாய் இருந்தது. ''ஒருவர் தனக்குத் தலைக்காவல் இல்லாமையால்'' இது நிகழ்ந்தது என்று அப்பர் பெருமான் தன் நிலையை விளக்குகின்றார். ''நம்பர் அருள் இல்லாமையால்'' என்று சேக்கிழார் பெருமான் இதைக் குறிப்பிடுகின்றார்.

கல்வி, செல்வம், பதவி, புகழ் போன்றவற்றால் இந்தத் தடை நீங்காது. மாறாக, இவையெல்லாம் 'தான்', 'தனது' என்ற இரு மன நிலைகளை வலுப்படுத்தும். இந்த இரண்டும் ஆணவத்தின் வெளிப்பாடுகள். ஆணவம் என்பது ஒரு மூல மலம். உயிர் தோன்றிய காலம் முதற்கொண்டு, உயிருடன் தன்னைச் சேர்த்துக் கொண்டு, உயிரின் வியாபகத்தைக் கட்டுப்படுத்துகிறது. விபரீத எண்ணங்களைத் தருகிறது. ஆணவத்தின் விளைவாக, உயிர் தன்னை தனித்த ஒரு பொருளாகக் கருதிக் கொண்டு, தனது வளம், முன்னேற்றம் ஆகியவற்றிற்குப் பிற பொருள்கள் யாவற்றையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற தவறான எண்ணத்தை வளர்த்துக் கொள்கிறது. உடலையும், கருவிகளையும் தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டியவைகளாகக் கருதாமல், அவற்றைத் தானாகவே பாவித்துக் கொள்கிறது. செயல்பாட்டில் இறங்குகிறது. வினைப் பயன்களை ஈட்டுகின்றது. மாயா காரியங்களை உண்மையெனக் கொள்கிறது.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களால் சூழப்பட்டு, மும்மலத்ததாகிறது. சகலமாகிறது. ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களைக் கொண்ட

வர்கள் பிரளயாகலர்கள். ஆணவ மலத்தில் மட்டும் நிற்பவர்கள் விஞ்ஞானகலர்கள். மலங்கள் உள்ளவரை அறியாமை தொடரும். மலங்களும், அறியாமையும் சேர்ந்தே நிற்க வேண்டும்.

இதுகாறும், உயிர் உடல் வழி சென்று, புலன்களைப் பின்பற்றி, அனுபவங்களைப் பெற்று வந்தது உண்மை. உயிர் உடலுக்கு அடிமையாகி, தன்னுரிமையைப் பறிகொடுக்கின்றது. இந்த நிலை மாற வேண்டும். உயிர், தான் உடலல்ல என்றும், தான் ஒரு அறிவுப் பொருள் என்றும் உணர்ந்து கொள்ள வேண்டும். அறிவுப் பொருளாகிய உயிர் சில வரம்புகளுக்கு உட்பட்டே இயங்குகிறது என்பதும் உண்மையே. ஆனாலும் உயிரின் அறிவு சிவப் பரம்பொருளின் அறிவுடன் கலக்கும் தன்மை பெற்றுள்ளது. எனவே, உலகத்துடன் இணைந்துள்ள நிலையைத் தவிர்த்து, சிவத்துடன் சேரும் வாய்ப்பை உயிர் இயல்பாகவே கொண்டது.

உயிர் தனது உண்மை இயல்பை மறந்துவிடுகிறது. உயிர், அகக் கருவிகளாகிய மனம், புத்தி, சித்தம் போன்றவற்றின் வாயிலாக தனது அறிவை வெளிப்படுத்திக் கொள்கிறது. உயிரின் அறிவின் குறைபாடு இந்த அகக் கருவிகளையும் பாதிக்கின்றது. மனதிற்கு மறதி ஒரு தீராப்பிணியாக வந்து சேருகிறது. பண்புகளால் உயர வேண்டும் என்று விரும்பினாலும், மறதி ஒரு தடையாக அமைந்து, உயிர் அனுபவத்தைத் தாழ்வடையச் செய்கிறது.

இவற்றையெல்லாம் மக்களிடையே கண்டறிந்தவர் திருஞான சம்பந்தர் பெருமான். கொங்கு நாட்டில் திருக்கொடி மாடச் செங்குன்றூர் என்ற ஊரில், பனி நோயைத் தீர்க்கத் திருப்பதிகம் பாடிய பிள்ளையார் 6வது திருப்பாட்டில்

''மறக்கும் மனத்தினை மாற்றி, எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்ப் பிழையாத
வண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமையேத்தும் பணியறியோம்''

என்று குறிப்பிடுகிறார்.

மறப்பதைத் தன்மையாகக் கொண்ட மனம் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். இறைவனை மறவாது ஏத்தும் பண்பினை வளர்க்க வேண்டும். இதற்கு உயிர் துணைபுரிய வேண்டும். இரண்டும், தத்தம் பணியினைப் பிழையாது செய்ய மலரால் பணிந்து ஏத்தும், அடிமை உணர்வினைப் பேண வேண்டும்.

இதிலிருந்து ஒரு உண்மை தெளிவாகிறது. உயிரின் படிநிலை வளர்ச்சி என்பது, தன்னை உடல், அதன் கருவிகள், உலகப் பொருள்கள், செல்வம், புகழ் போன்றவற்றிலிருந்து விலக்கிக் கொள்ள வேண்டும். தான் அவையல்ல என்ற உணர்வு தோன்றும். பின்னர் தான் தனித்து நிற்கும் நிலையில் சிவப் பரம்பொருளை நாடி, பாழ் என்ற நிலையை மாற்றி பூரணமாக்கிக் கொள்ள வேண்டும். சிவனது வியாபகத்தில் சீவன் வியாப்பியமாக்கிக் கொள்ள வேண்டும்.


அருளாளர்கள் இதுபோன்ற அனுபவங்களைப் பெற்று, ஆனந்தத்தில் மூழ்கி, பேரின்பப் பெருவெள்ளத்தில் திளைத்து நின்றார்கள். ''நான் பெற்ற இன்பம்'' என்றார் திருமூலர் பெருமான். இவ்வையகம் எல்லாம் இத்தகைய இன்பத்தை பெற வேண்டும் என்று விரும்பினார்.

இந்த இன்பம் திருமூலர் பெருமானுக்கு எவ்வாறு கிடைத்தது? பாசங்களைக் கழித்து, மலங்களை நீக்கியதால் சிவத்துடன் சம்பந்தம் பெறும் பேறு வாய்த்தது. சிவதரிசனம் நிகழ்ந்தது. பிறவிப் பெருங்கடலைத் தாண்டிப் பெருந்துறை சேர்தல் ஆகிய அனுபவம் கிடைத்தது.

''ஒழிந்தேன் பிறவி, உறவெனும் பாசம்
கழிந்தேன், கடவுளும் நானும் ஒன்றானேன்
அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார்புடைய சிவனைக் கண்டேனே.''

*(திருமந்திரம் ஒன்பதாம் தந்திரம்)*

இது ஒரு பெரும் பயணம். அனைத்து சீவர்களும் மேற்கொள்ளும் சாதனை நெறி. திருவருளே இப்பயணத்திற்கு வழித்துணையாகும். பல பிறவிகளில் இந்தப் பயணம் தொடர்ந்து வரும் நிலையில் உயிருக்குத் தளர்ச்சி ஏற்படுகிறது. தன்னைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் ஒன்றை உயிர் நாடுகிறது. தோன்றாத் துணையாக உயிருக்குள் உயிராக வீற்றிருக்கும் இறைவன் உயிருடன் அருட்சக்தியை இணைக்கிறான். குருமுகமாக வெளிவருகின்றான். இறைவன் சகலர்க்கும் குருவாக வந்து உணர்த்துகிறான். பிரளயாகலருக்கு இறைவன் தன் கோலத்திலேயே காட்சி அளித்து உயிருக்கு வீட்டுப்பேற்றினை அளிக்கின்றான். விஞ்ஞானகலருக்கு உள்நின்று உணர்த்துகிறான். உயிர் திருவருள் வீழ்ச்சியை அனுபவிக்கத் தொடங்குகிறது. முதலில் மந்தமாகவும், மந்த தரமாகவும், பின்னர் தீவிரமாகவும், தீவிரதரமாகவும் திருவருள் உயிரைத் தாக்குகின்றது. திருமூலர் பெருமான் பெற்ற அனுபவம் இதோ!:



''அருளால் அமுதப்பெருங் கடலாட்டி
அருளால் அடிபுனைந்து ஆர்வமும் தந்திட்டு
அருளான ஆனந்தத்தாரமு தூட்டி
அருளால் என்நந்தி அகம் புகுந்தானே''

(திருமந்திரம்)

''புறமே திரிந்தேன்எனப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுதென்னை நின்மலனாக்கி
அறமே புகுந்தெனக் காரமுதீந்த
திறமே தென்றெண்ணித் திகைத் திருந்தேனே''

(திருமந்திரம்)

குருவாகிய ஞானாசாரியன் சீடனை ஏற்றுக்கொள்ளும் பாங்கு, சீடனுடைய உயிரின் முதிர்ச்சியைப் பொறுத்துள்ளது. குரு ஆட்கொண்டு, தீட்சை புரியும் விதம் தனித்தன்மை வாய்ந்தது. திருநாவுக்கரசரை இறைவன் சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டான். அவருடைய தமக்கையார், திலகவதியார், திருநீற்றை வழங்கி, ஐந்தெழுத்து ஓதி, குருவாக விளங்கினார். இறைவி, ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்து, உணர்வரிய மெய்ஞ்ஞானத்தைக் கூட்டுகிறார். சுந்தரருக்கு ஓலைகாட்டி இறைவன் அவரை ஆட்கொள்கிறான். மாணிக்கவாசகர், வாழ்க்கைக் கடலைக் கடந்து திருப்பெருந்துறை சேர்ந்து குருவருள் பெறுகிறார்.

குரு, சீடனுக்குத் தருவது உபதேசம். மூவாயிரம் மந்திரங்கள் அருளிச் செய்த திருமூலர் பெருமான் முப்பது மந்திரங்களில் திருமந்திரப் பிழிவை உபதேசமாகத் தருகிறார். இவை முதல் தந்திரத்தில் வைக்கப் பட்டுள்ளன. இதுவே ''மூலன் உரை செய்த முப்பது உபதேச''மாகும். இப்பகுதி ஒரு தனி நூலென்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆயினும், உபதேசம் திருமந்திர மாலையின் ஒரு ஆழமான, அனுபவக் கருத்துகள் கொண்ட பகுதி என்று கொள்வதும் பொருத்தமே. நல்ல முதிர்ச்சி பெற்ற சீடன் ஒருவன், திருமந்திரம் வாயிலாக சிவஞானம் பெறும் விருப்பத்தை ஞான ஆசாரியனிடம் தெரிவிக்கும்போது, ஆசிரியன் சில அடிப்படை உண்மைகளை, சீடனுக்கு, தெளிவுபடுத்தும் வகையில், உபதேசப்பகுதி அமைந்துள்ளது.

அதைப் பற்றி மேலும் சிந்தித்து மகிழ்வோமாக.

(தொடரும்)

★★★

# சிவராத்திரி மகிமை

- முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.

மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மகா சிவராத்திரி என்று வழங்கப்படுகிறது. வேதங்களில் சாம வேதமும், நதிகளில் கங்கையும், ஐம்பூதங்களில் ஆகாயமும், தேவர்களில் தேவேந்திரனும் சிறப்பு பெற்று விளங்குவதைப் போலவே விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதம் ஆகும்.

சிவபெருமான், திருமால் பிரமர் காணத் திருவண்ணாமலையில் பேரொளிப் பிழம்பாகத் தோன்றிய இராத்திரியே சிவராத்திரி ஆகும்.

*''அரியும் யானும் முன் தேடும் அவ்*
*அனற்கிரி அனல*
*கிரி எனும்படி நின்றதால்*
*அவ்வொளி கிளர்ந்த*
*இரவதே சிவராத்திரி*
*ஆயினது! இறைவர்*
*பரவி உய்ந்தனர் அன்னதோர்*
*வைகலிற் பலரும்''*

எனவரும் கந்தபுராணப் பாடலில் பிரமதேவர், ''திருமாலும் நானும் திருவண்ணாமலையில் தேட, சிவபெருமான் ஒளிப் பிழம்பாக நின்ற இரவே சிவராத்திரியாகும். அச்சிவ இராத்திரியில் இறைவரை அனைவரும் வழிபட்டு உய்ந்தனர்'' என்று கூறியிருப்பதைக் காண்கிறோம்.

சிவராத்திரி குறித்து மேலும் இரு வரலாறுகள் குறிக்கப்படுகின்றன. உமாதேவியார் தம் வளைக் கரத்தால் சிவபெருமானின் திருக்கண்களை மூடி மறைத்த குற்றம் தீர, ஆகம விதிப்படி சிவபிரானை நான்கு யாமங்களிலும் பூசித்து வழிபட்ட ராத்திரியே சிவராத்திரி என்றும் கூறப்படுகிறது. திருப்பாற்கடலில் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சு தோன்றியபோது, சிவபெருமான் அதனை உண்டு தம்மிடற்றில் அதனை அடக்கியருளிய ராத்திரியே சிவராத்திரி எனவும், அவ்விரவில் தேவர்கள் சிவபெருமானைப் போற்றி வழிபட்டதைப் போலவே மாந்தரும் வழிபட்டுய்ய வேண்டும் எனவும் கூறப்படுகிறது.

சிவராத்திரி பற்றிய வரலாறுகள் இவ்வாறு பலவாறாகக் கூறப்படினும், சிவபெருமானின் பெருமையை இந்த ராத்திரியின்போது போற்றி உறங்காது விழித்திருந்து விரதம் இருத்தல் வேண்டும் என்பது தெளிவு. ''சிவராத்திரி போது துயிலோம் என்ற விரதியர்'' என்பது தாயுமானவர் திருவாக்கு. சிவராத்திரி விரதப்பெருமையைச் சிவபெருமானே நந்திதேவருக்கு உணர்த்தியருள, அவரிடம் சூரியன், முருகன், எமன், மன்மதன், இந்திரன், அக்கினி, சந்திரன், குபேரன் முதலானோர் கடைப்பிடித்து நன்மைகள் பலவற்றைப் பெற்றுள்ளனர். இதனை

*''இந்தநல் விரதந் தன்னைச் சிவன் நந்திக்கு*
*இசைத்திட உணர்ந்து செங்கதிரோன்*
*கந்தவேள், கதைக்கை காலன், விற்காமன்*
*கடவுளர் கண்ணோர்ஆ யிரத்தோன்*
*செந்தழற் கடவுள், மதி, நிதிக் குபேரன்*
*செப்பிய வரன்முறை நோற்றுத்*
*தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத்*
*தகைபெறு தலைவர் ஆயினரால்''*

என்ற பாடலால் அறிகிறோம்.

திருவாரூரை ஆண்ட முசுகுந்தன் என்ற சோழ மன்னனின் வரலாற்றோடு இணைத்துச் சிவராத்திரியின் பெருமை பேசப்படுவது இங்கே அறியத்தக்க அற்புத வரலாறாகும். ஒரு வில்வ மரத்தின் அடியில் சிவபெருமான் தம் தேவியாரோடு அமர்ந்து சிவராத்திரியன்று அளாவளாவிக் கொண்டிருந்தபோது அம்மரத்தில் வாழ்ந்திருந்த குரங்கு ஒன்று தானும் தூங்காமல் அவ்விரவு முழுதும் விழித்திருந்தது. தூக்கம் வராத அக்குரங்கு வில்வ இலைகளைப் பறித்து அவற்றைச் சிவபெருமான் மேலும் உமாதேவியார் மேலும் வீசிய வண்ணம் இருந்தது. ஒரு இனம் புரியாத தெய்வீக உணர்வே அவ்வாறு செய்ய அக்குரங்கினைத் தூண்டியது எனலாம்.

சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் தூங்காதிருந்த குரங்கு வீசிய வில்வ இலைகளை மகிழ்ந்து ஏற்றுக் கொண்ட சிவபெருமானும் அம் முசுக்கலையை (குரங்கு) முசுகுந்த சக்கரவர்த்தியாகப் பிறக்க திருவருள் புரிந்தருளினார். இறைவர் திருவருளால் சக்கரவர்த்தி

யாகும் பேறு பெற்ற அக்குரங்கும், இறைவனைச் சிவ ராத்திரியில் பூசித்துத்தான் பெற்ற திருவருளை, உலகம் யாவும் உணர்ந்து கொள்ளும் பொருட்டு, முசுகுந்த னாகத் தான் வாழும் காலத்திலும் குரங்கு முகத்துட னேயே வாழ்ந்திருக்க வேண்டும் என இறைவரைக் கேட்டுக் கொண்டது. இறைவரும் அவ்வாறே அருள் புரிய, அக்குரங்கு முசுகுந்தச் சக்கரவர்த்தியாகத் தன் மறுபிறவியில் தோன்றிச் சோழர் குலத்தின் புகழ் இந்திர உலகத்திலும் பரவுமாறு சிறந்த ஆட்சியைப் புரிந்தமையை நமக்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, கந்தபுராணம், கலிங்கத்துப்பரணி முதலான நூல்கள் காட்டுவதனால் சிவராத்திரி விரதச் சிறப்பினை நாம் தெரிந்துகொள்ளலாம். குருத்ருகன் என்ற வேடன் ஒருவன் சிவராத்திரியின் போது அவனையும் அறி யாமல் இருந்த விரதமே அவனை மறுபிறவியில் குகனாகப் பிறக்க அருள் புரிந்தது என்ற ஒரு வரலாறும் சிவராத்திரி விரதத்தின் பெருமையைக் காட்டுகிறது.

இனி நாம் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கும் முறையைச் சுருங்க அறிந்துகொள்வோம். சிவராத் திரிக்கு முதல்நாள் ஒரு வேளை மட்டுமே உண்டு மனத் தூய்மையும் உடல் தூய்மையும் பேணி அன்றிரவு துயிலவேண்டும். மறுநாள் சதுர்த்தசியாகிய சிவ ராத்திரி அன்று விடிகாலையிலேயே துயில் எழுந்து நீராட வேண்டும். பிறகு திருக்கோயிலுக்குச் சென்று சிவபெருமானைத் துதித்து வழிபட்டு அன்று பகல் முழுவதும் சிவ சிந்தனையோடும் சிவத் தியானத் தோடும் தூய்மையாக இருக்க வேண்டும். வீட்டில் பூசையறையைக் கோமயத்தால் மெழுகித் தூய்மை செய்து கோலமிட்டு அழகு படுத்த வேண்டும். மாலை யில் சிவாலயம் மீண்டும் சென்று தரிசனம் செய்ய வேண்டும். பிறகு சிவராத்திரியின் நான்கு யாமங் களிலும் அவரவர் இல்லங்களிலுள்ள பூசையறை யில் சிவபெருமானை அபிஷேக அலங்காரம் செய்து அர்ச்சித்து நிவேதனம் அளித்துப் பூசிக்க வேண்டும்.

சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யுங்கால் பால், தயிர், தேன், சர்க்கரை, இளநீர், பன்னீர், எலுமிச் சம்பழம், சந்தனம், விபூதி, பஞ்சகவ்வியம், பஞ்சா மிர்தம், தேன், கருப்பஞ்சாறு ஆகியவற்றைப் பயன் படுத்தவேண்டும். சிவபெருமானின் அலங்காரத் திற்குச் சந்தனம், வில்வத்தளிர், தாமரை மலர், முல்லைமலர், குங்குமப்பூ, நந்தியா வர்த்தமலர் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

சிவபெருமானை முதல் யாமத்தின்போது தாமரை மலராலும், இரண்டாம் யாமத்தின்போது துளசி இலையாலும், மூன்றாம் யாமத்தில் வில்வத் தளி ராலும், நான்காம் யாமத்தில் நீலோற்பல மலராலும் அர்ச்சனை செய்தல் வேண்டுமென ஆகமங்கள் குறிப்



பிடுகின்றன. முதல் யாமத்தில் பயற்றம்பருப்புப் பொங்கலையும், இரண்டாம் யாமத்தில் பாயசம், மூன்றாம் யாமத்தில் எள்ளன்னம், நான்காம் யாமத் தில் சுத்தான்னம் நிவேதனம் செய்ய வேண்டும். ஒவ்வொரு யாமத்திலும் தூபதீப ஆராதனைகளைச் சிறப்புறச் செய்ய வேண்டும். இவ்வாறெல்லாம் முறைப்படி செய்ய இயலாமல் போனாலும், இயன்ற அளவு செய்து சிவபெருமானை மனம், மொழி, மெய் களால் தியானித்து, இரவு முழுவதும் பூசித்து மறுநாள் காலை நீராடி பாரணை செய்து பிரசாதம் உண்ண நாமும் உய்வதோடு, நம்மூவேழு தலைமுறையின ரையும் உய்வித்து நலம் எய்தி வாழலாம்.

சிவபெருமான் அன்பர்தம் உள்ளத்திலும், ஆல யங்களிலும் கோயில் கொண்டிருப்பதைப் போலவே பேய் வாழும் சுடுகாடுகளையும்கூட வெறுப்பதில்லை. 'கோயில் சுடுகாடு' என்பார் மணிவாசகர்.

*''வாயே நீ வாழ்த்து கண்டாய்*
*பேய்வாழும் காட்டகத்தே ஆடும்பிரான் தன்னை*
*வாயே நீ வாழ்த்து கண்டாய்.''*

என்பார் திருநாவுக்கரசர். அத்தகைய சிவபிரானை வாழ்த்தி சிவராத்திரியை ஒட்டி ''மயானக் கொள்ளை யும் நடத்தப்படுகிறது.

★★★

# தலங்களும் திவ்வியதேசங்களும்


ஆலயங்களில் சைவ சமய குரவர்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற ஆலயங்கள் மிகச் சிறப்புடையன. தேவாரப் பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் தலங்கள் என்றும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் திவ்விய தேசம் என்றும் பெயர்பெறும். ஆழ்வார்கள் பாடல்களை ''மங்களா சாசனம்'' எனச் சிறப்பித்துக் கூறுவர். சமயாசாரியர்களால் பாடல் பெற்ற சிவத்தலங்கள் இருநூற்று எழுபத்து நான்காகும். அவற்றின் விவரம்

| | |
|---|---|
| சோழநாடு | 190 |
| தொண்டை நாடு | 32 |
| நடு நாடு | 22 |
| பாண்டி நாடு | 14 |
| மலைநாடு | 1 |
| துளுவம் | 1 |
| கொங்கு நாடு | 7 |
| ஈழ நாடு | 2 |
| வட நாடு | 5 |
| ஆக தலங்கள் | 274 |

இதனை

''துங்கவட கயிலாய முதலா ஐந்துதுளு ஒன்று
தொண்டை வடநாட்டு எண்ணான்கு
தங்கு நடுநாட்டு இருபத்திரண்டு பொன்
னித் தலம் நூற்றுத் தொண்ணூறு
மலை நாட்டு ஒன்று
கொங்கேழு சிங்களத்தில் இரண்டு
வைகை கொழி தமிழ் நாட்டு
ஈரேழு முதலாஞ் சூலச்
செங்கையார் தலம் இருநூற்று
எழுபா நான்கு... ''

என்ற பாடலால் அறியலாம்.



ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருப்பதிகள் நூற்றெட்டாகும். அவற்றின் விவரம் :

| | |
|---|---|
| சோழ நாடு | 40 |
| பாண்டி நாடு | 18 |
| மலை நாடு | 13 |
| நடு நாடு | 2 |
| தொண்டை நாடு | 22 |
| வட நாடு | 12 |
| பரமபதம் | 1 |
| ஆக திருப்பதிகள் | 108 |

இதனை,

''ஈரிருபதாஞ் சோழம் ஈரொன்பதாம் பாண்டி
ஓர் பதின்மூன்றாம் மலைநாடு ஓரிரண்டாம் சீர்
நடுநாடு
ஆறோடு ஈரெட்டு தொண்டை அவ்வடநாடு
ஆறிரண்டு
கூறு திருநாடு ஒன்றாகக் கொள்''

எனும் பாடலால் அறியலாம்.

★★★

# பாடல் பெற்ற திருத்தலம் - சிதம்பரம்

- பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன்

செல்வ நெடுமாடம் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே.

- திருஞானசம்பந்தர்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் பூவுலகின் புனிதபூமி - பூலோக சொர்க்கம். இவ்வாறு போற்றிக் கூறுவதற்கேற்பத் தெய்வமணங் கமழ்வது தமிழ்நாடு. தமிழுக்கு அமிழ்து என்ற பெயர் போலத் தமிழுக்குச் சிவம் என்பதும், தமிழே சிவம் என்பதும், தமிழகமே சிவாலயம் என்பதும் பொருந்தும்.

பூகோளத்தின் முதல் தோற்றம் தென்குமரிக் கண்டம் என்பர் அறிஞர். அத்தென் தமிழகத்துத் தோன்றிய நுதல்விழிச் செல்வனே எந்நாட்டவரும் ஏற்றிப் போற்றும் இறைவனாக ஒளிர்கின்றான். முதலில் தோற்றமுற்ற மண்ணிலேயே முதல்வனும் தோன்றுவான். எனவேதான் மணிவாசகப் பெருமானும் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று பூ முதல்வனின் தோற்றப் பழமையைக் கூறி உணர்த்தினார்.

சிவனால் தமிழகம் பெற்ற அருளும், சீர்மையும் பற்றி அறிய தமிழிலக்கியங்களும், அவற்றுள் சிறப்பாக வழிபாட்டு இலக்கியங்களுமே சாலும். சிற்றூரால் சீர்பெற்ற தமிழகம், சிவத்தலங்களால் பேர் பெற்றமை உலகறிந்த உண்மை. திருத்தணிகை முதல் தென்குமரி வரை இடைப்பட்ட நிலத்தில் நிறைந்து விளங்கும் கோயில் தலங்களும், கோபுரங்களும் சிவனருள் மணக்கும் எழிற்கோலச் சின்னங்களாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றன் பெருமை உணர்த்த எழுந்த புராண இலக்கியங்கள், பிரபந்த இலக்கியங்கள், தேவாரத் திருப்பதிகங்கள், திருவிசைப்பாக்கள் தனிப்பாடல்கள், சித்தர் பாடல்கள் முதலிய அனைத்தும் சிவனருள் மணக்கும் அருள்நெறி நூல்களாகும். இவற்றோடன்றிக் கோயில் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் சிவநெறி உணர்த்தும் வரலாற்றுச் செல்வங்களாகும்.

சிவம் பேணும் நாடு செந்தமிழ்நாடு. தமிழக வரலாற்றுக் கருவிற்கு உயிராகவும், உலகக் கலைச் செல்வத்திற்குச் சிகரமாகவும் இருப்பன இங்குள்ள திருக்கோயில்களே. சிதைவிடத்து ஒல்காச் சுதை வேலைப்பாடுகள்; நுண்மாண் நுழைபுலத் திறனால் கைவரப்பெற்ற கலைச் செல்வங்கள்; கலைக் கூடங்களாக - அருளாலயங்களாக - நின்று விளங்குவன இத்திருக்கோயில்கள். கோயிலருட் சிறப்புணர்ந்தே அருட் கவியரசி ஔவைப் பிராட்டியார் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று கூறினார்.

### அன்பே சிவம்

தமிழக மக்கள் அன்பு நீர்பாய்ச்சி அறக்கதிர் விளைத்த பண்பு நலம் மிக்கவர்கள். வீரத்திற்கு விளைநிலமாகத் தமிழகம் விளங்கியது போலவே ஈரத்திற்கும் (அன்பிற்கும்) இருப்பிடமாகத் திகழ்ந்தது. ஈரமில்லாத மனிதவாழ்வு பாலை நிலத்து வற்றல் மரம் தளிர்த்தது போன்றதாகும். தளிர்க்காத வற்றல் மரம், அதிலும் பாலை நிலத்தில் தளிர்க்குமோ? அதுபோலவே, 'எவ்வுயிரும் தன்னுயிர் போல் மதிப்பவனே மாதேவன் உறையும் மனம் பெற்றவன்' என்பார் வடலூர் வள்ளலார். இத்தகைய மனவுணர்வாகிய அன்பே 'சிவம்' ஆகும். அன்பு வேறு; சிவம் வேறு எனக் கொண்டு நெறிதவறித் திரிவார்க்கு அறிவுறுத்தும் வகையில்,

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.''

எனச் சிவத்தின் நிலையைத் திருமூலர் கூறியுள்ளார். ஆகையால், அன்பு வழிபாடே சிவவழிபாடு. இதுவே உலகச் சமயங்கள் அனைத்தும் உணர்த்தும் இறை வழிபாடு.

## தமிழ் வேந்தரின் சிவத்தொண்டு

'சிவாய நம எனச் சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை' யென எண்ணி, சோழ வேந்தர்களும் பாண்டிய வேந்தர்களும் எழுப்பிய திருக்கோயில்கள் எண்ணில் அடங்கா. கொடிகட்டி வாழ்ந்த கோட்டை கொத்தளங்கள், அழகு மிகுந்த அரண்மனைகளெல்லாம் அழிந்தொழிய, அருள்வடிவான இறைவனுக்கு அவர்கள் எழுப்பிய திருக்கோயில்கள் மட்டும் அழியாதுள்ளனவெனில், இறைவனின் பெருமையை இயம்பவும் ஒண்ணுமோ? இவ்வருளாலயங்கள் இன்றும் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் உண்மையை விளக்கித் திகழ்கின்றன.

சிற்பங்கள் நுட்பங்களோடு மிளிர, ஓவியங்கள் உணர்ச்சி பாவங்களோடு ஒளிர, உலகெலாம் கடந்தானின் உறைவிடங்கள் நிறைந்தது தமிழகம். மூவேந்தருள், சோழ வேந்தரின் வளமெல்லாம் திருநீற்றுச் சொரூபம் காட்டவே பயன்பட்டன எனலாம். சோழ வேந்தரும், சோழர்குல மங்கையரும் செய்த தானதருமங்கள், கோயிற்பணிகள் பல. இதனாலேயே சோழ வேந்தர், தாம் விரும்பும் அரசமுடி மாலையாகச் சிவபிரானின் ஆத்திமாலையையே கொண்டனர் எனக் கூறுவர்.

தமிழகத்தின் நடுநாயகமாக நின்று விளங்கியது சோழநாடு. சோழநாட்டின் பெரும்பகுதி ஆத்திமரம் மிகுந்த தோப்பும் துரவும் செறிந்த கான்வள நாடாக விளங்கியது. ஆத்திக்காடு மிகுந்திருந்தமையால், இப்பகுதி 'ஆர்க்காடு' என்னும் பெயர் பெற்றது. 'ஆர்' என்பது ஆத்தி என்னும் பொருள் குறிப்பது.

இவ்வார்க்காடு தெற்கு, வடக்கு எனப் பிரிந்து, தென்னார்க்காடு வடவார்க்காடு என அமைந்தது. வட பகுதியிலும் தென்பகுதி நிலநீர் வளத்தாலும், செல்வச் செழிப்பாலும், வாழ்க்கை நலத்தாலும், வரலாற்றுச் சிறப்பாலும், அருளாலயப் 'பொலிவாலும், அருள்மணப் பெருக்காலும் சிறந்தது.

நடராஜர் கலை நடம் புரிந்தருளும் திருத்தலம் தில்லை.

இத்தில்லைத்தலம், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது; கொள்ளிடம் என்னும் காவிரியின் பிரிவுக்கு வடக்கிலும், மணிமுக்தா நதிக்குத் தெற்கிலும் உள்ளது; சென்னைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் உள்ள மெயின் லைன் இரயில் பாதையின் இடையே உள்ளது. சிதம்பரம் நிலையத்தில் இறங்கி, சுமார் 1 கி. மீட்டர் தூரம் மேற்கே சென்றால் நகரத்தின் நடுநாயகமாகத் திகழும் திருக்கோயிலையும், இதன் நான்கு கோபுரங்களையும் காணலாம்.

## தலப் பெயர்கள்

நடராசப் பெருமான் இடையறாது கலைநடம் புரிந்தருளும் இச்சிவத் திருத்தலத்திற்குக் கோயில் என்பது சிறப்புப் பெயர். **'கோயில்'** என்பது எல்லா ஆலயத்திற்கும் பொதுப் பெயர். ஆனால் இப்பெயரே சிறப்புப் பெயராக ஒரு குறிப்பிட்ட தலத்தைக் குறிக்குமானால், அது இத்தலத்தின் மிக்க உயர்வைக் குறிக்கும் அன்றோ?

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும். சைவர்களுக்குக் கோயில் சிதம்பரம். வைணவர்களுக்குக் கோயில் திருவரங்கம். திருவிசைப்பா அருளிய கருவூர்த் தேவர், ''என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து என்னையும் புணர்ப்பவன் **கோயில்**'' என இத்தலத்தைப் போற்றுங்கால், இத்தலத்தின் சிறப்புப் பெயரை உணர்த்துகின்றார்.

**'தில்லைவனம்'** என்பதும் இத்தலத்தின் பெயர். இத்தலம் தில்லை என்னும் மரங்கள் அடர்ந்த காடாக இருந்ததால் இப்பெயர் பெற்றது. தில்லை என்னும் இம்மரங்கள் இப்பொழுது சிதம்பரத்தில் காணக் கிடைக்கவில்லை. சிதம்பரத்திற்குக் கிழக்கில் உள்ள பிச்சாவரத்திற்கு அருகே அமைந்துள்ள உப்பங்கழியின் கரைகளில் மிகுதியாக இருக்கின்றன. தில்லைவனம் என்னும் இத்தலத்தின் பெயரைத் **'தில்லை'** எனவும் வழங்கினர். பக்திநெறிச் சான்றோர்கள் பலரும் தம் பாடல்களில் 'தில்லை' என இத்தலத்தின் பெயர் குறித்தே பாடியுள்ளனர். ''மன்னுக **தில்லை!** வளர்க நம் பக்தர்கள்! வஞ்சகர் போயகல!'' என்பார் சேந்தனார்.

இத்தலத்திற்கு **'பெரும்பற்றப் புலியூர்'** என்னும் பெயரும் உண்டு. புலிப்பாதர் (வியாக்கிரபாதர்) என்னும் முனிவர் பெரும் பற்றினால் இத்தலத்தில் பூசித்ததால் இப்பெயர் ஏற்பட்டது. ''**பெரும்பற்றப் புலியூரானைப்** பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்பார் அப்பரடிகள்.

இத்தலம் **'சிதம்பரம்'** என்னும் பெயரால் இப்பொழுது வழங்கி வருகின்றது. சித் + அம்பரம் = சிதம்பரம் சித் - அறிவு, அம்பரம் - வெட்டவெளி. ஆகையால் இத்தலம் **'ஞானாகாசம்'** என்னும் பெயர் உடையதாயிற்று. சிதம்பரத்திற்குப் **'பொன்னம்பலம்'** என்னும் பெயரும் உண்டு. அம்பலம் என்பது சபையைக் குறிப்பது. **'பொன்னம்பலநாதன்'** கழல் பொற்போடு பணிந்தான் என்பார் வில்லிபுத்தூராழ்வார்.

புலிப்பாதர் என்னும் முனிவர் இத்தலத்தில் இறைவனை பூசித்ததால், இத்தலத்திற்கு **'புலியூர்'**

என்னும் பெயரும் தோன்றி வழங்கிவந்தது. ''பெருமை யார் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே'' என்று இத்தலத்தைப் போற்றிப் புலியூர் என்னும் பெயர் வழக்கை உணர்த்துகின்றார்.

இப்பெயர்களேயன்றி, இத்தலத்திற்கு **'வியாக்கிர புரம்', 'பூலோக கைலாசம்', 'புண்டரீகபுரம்'** முதலிய வேறு பெயர்களும் உண்டு.

## தில்லைத் திருக்கோயில்

சிதம்பரத் (கோயில்) தலம் சைவர்களுக்கு முதன்மையானது. அவர்கள் இத்தலத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துப் போற்றி வருகின்றனர். இவ்வாறு கொள்வதற்கும், போற்றுவதற்கும் காரணம். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் மேன்மை பெற்று விளங்குவதே.

இத்தல மூர்த்தி ஓம் என்னும் பிரணவத்தின் வடிவாக நின்று நாதாந்தக் கூத்தாடும் நடராசப் பெருமான். ஐந்தெழுத்துச் சொரூபியாக விளங்கும் நடராஜப் பெருமானின் திருக்கூத்து, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் உணர்த்துகின்றது. எம்பெருமான் நடராஜர் தம் திருக்கூத்தின்மூலம் இவ்வைந் தொழில்களையும் நிகழ்த்தியருள்கின்றார்.


உலகம் விராட்புருடன் வடிவம்; திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா கொப்பூழ்; திருவண்ணா மலை மணிபூரகம்; திருக்காளத்தி கண்டம்; காசி புருவ மதியம்; சிதம்பரம் இருதயம் என்பர்.

உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டே நடை பெறும் ஆனந்தத் தாண்டவத்தை நடராஜப் பெருமான் அடியார் பொருட்டு; இருதயத்தானமாகிய சிதம்பரத் தில் ஆடிக்காட்டியருள்கின்றார்.

சைவ உலகத்தில் தனிச்சிறப்புக் கொண்டு திகழும் இச்சிதம்பரத் தலத்தில் அமைந்து விளங்கும் விசேட தீர்த்தங்கள் பத்து. இவற்றுள் சிவகங்கை என்னும் தீர்த்தம் சிவ வடிவமாக அமைந்து விளங்குவதாகச் சிதம்பர மான்மியம் கூறுகின்றது. சிதம்பர மூர்த்தி, தல, தீர்த்த விசேடத்தைக் குமரகுருபர சுவாமிகள்.

''மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''

''ஏத்த ருந்தலம் எழிற்புலி யூரே''



''தீர்த்தம் என்பது சிவகங் கையே''

எனக் கூறிப் போற்றுகின்றார்.

இத்தலத்துத் திருக்கோயிலில் சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்தசபை, இராச சபை என்னும் ஐந்து மன்றங்களும் அமைந்திருத் தலும், சிவன் விஷ்ணு இருவர் திருச்சந்நிதிகள் ஒரே இடத்தில் நின்று தரிசிக்கும் படி அமைந்திருத்தலும் தனிச் சிறப்புகளாகும்.

பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்தி களும் கோயில் கொண்டுள்ள திருத்தலம் இதுவாகும்.

மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணிற்ற மன்றுள் பரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப் பொற் கூத்தனை யார் உரைப்பாரே?

- திருமந்திரம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளம் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

- பெரியபுராணம்

★★★

# சோழ நாட்டு திருப்பதிகள் - 40

- நித்திலக்கோ

### 1. திருவரங்கம்

அரங்கநாதர் - அரங்கநாயகி.

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ராசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மா! பள்ளியெழுந்தரு ளாயே.

- தொண்டரடிப் பொடியாழ்வார்
அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சி.

(ஈண்டுதல் - நெருங்குதல்; ஈட்டம்-கூட்டம். பிடி - பெண்யானை)

'அரங்கம் என்பது ஆற்றிடைக் குறையே' என்பது இலக்கணம், அரங்கம் என்ற சொல்லுக்கு அம்பலம், சபை என்பது பொருள்.


'கோயில்' என்று தலைமை பெற்ற வைணவத் திருப்பதி, இன்று ஸ்ரீரங்கம் என்று வழங்குகிறது. திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே மூன்றுகல் தொலைவில், காவிரி, கொள்ளிடம் ஆகிய இரண்டு ஆறுகளுக்கும் இடையே, தென்திசை நோக்கித் திருவரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கிறார்.

திருமால்புகழ் பாடிய பன்னிரு ஆழ்வார்களுக்குள் நம்மாழ்வாரை மட்டுமே பாடிய மதுரகவியாழ்வாரைத் தவிர்த்த மற்றைய பதினொருவருள், தொண்டரடிப் பொடியாழ்வார் அரங்கநாதரை மட்டுமே பாடியவர். திருமாலை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய இரண்டு பக்திப் பனுவல்களும் இவர் இயற்றி அருளியவை. 'திருப்பள்ளியெழுச்சி' என்னுந் திருமொழி பத்தும் நித்தியானுசந்தானத்திலுள்ளவை. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் திருவரங்கத்தைப் பற்றி மட்டும் உள்ள பாசுரங்களின் எண்ணிக்கை 247.

### 2. கோழி (உறையூர்)

அழகிய மணவாளர், உறையூர் வல்லி, வாசலட்சுமி

கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவல ரேயொப்பர் கூறை மன்ன,



பாழியம் தோளுமோர் நான்கு டையர்
பண்டினர் தம்மையும் கண்டறியோம்
வாழிய ரோவிவர் வண்ணம் எண்ணில்
மாகடல் போன்றுளர், கையில் வெய்ய
ஆழியொன் றேந்தி, ஓர் சங்கு பற்றி
அச்சோ ஒருவர் அழகியவா!

- திருமங்கை யாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி.

(பாழி - பெருமிடுக்கு; வெய்ய - கொடிய, ஆழி - சக்கரம், அச்சோ - ஆச்சரியக் குறிப்பிடைச் சொல்)

திருச்சி மலைக்கோட்டையிலிருந்து ஒரு கல் தொலைவு. திருப்பாணாழ்வார் பிறந்தருளிய தலம். திருமங்கையாழ்வார் மேற்குறித்த ஒரே பாடலால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

உறையூரில் திரு மூக்கீச்சரரும் என்ற தேவாரக் கோயில் இருக்கின்றது. இவ்வூர் ஒரு காலத்தில் சோழ அரசர்களின் தலை நகரமாக விளங்கியது.

### 3. தஞ்சை மாமணிக் கோயில்

நீமேலகப் பெருமாள் - செங்கமல வல்லி

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கரசு என்னுடை வாணாள்

அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்தவெம் அண்ணல்,
வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக்கோயிலே வணங்கி,
நம்பிகாள்! உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

- பெரிய திருமொழி

*(வெரு - அச்சம்; செகுத்த - அழித்த; வம்பு - வாசனை; நாமம் - புகழ்)*

திவ்விய தேச எண்ணிக்கையில் ஒன்றாக இருப் பினும் இதில் மூன்று சந்நிதிகள் அடங்கியுள்ளன. நீலமேகப் பெருமாளுடன் தஞ்சையாளி நகர் நரசிம்மர் - தஞ்சை நாயகி மணிக்குன்றப் பெருமாள் - அம்புய வல்லியையும் சேர்த்துச் சேவிக்கலாம். மூவரும் கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலம், தஞ்சா வூரிலிருந்து திருவையாறு செல்லும் சாலையில் சற்றொப்ப இரண்டரை கல் அளவில் வெண்ணாற் றங்கரையில் இருக்கின்றன.

திருமங்கையாழ்வார்-3, பூதத்தாழ்வார்-1, ஆக 4 பாசுரங்கள் பெற்ற திருப்பதி.

### 4. அன்பில்

வடிவழகிய நம்பி, அழகிய வல்லி நாச்சியார்

நாகத் தணைக்குடந்தைவெஃகா திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேரன்பில் - நாகத்
தணைப்பாற் கடல் கிடக்கும் ஆதி நெடுமால்,
அணைப்பார் கருத்தனா வான்.

- திருமழிசையாழ்வார் அருளிச்செய்த
நான்முகன் திருவந்தாதி (36)

அணை-படுக்கை

இலால்குடி இரயில் நிலையத்திற்குக் கிழக்கே 3 கல் தொலைவு, திருமழிசை ஆழ்வாரின் ஒரே வெண்பாவால் மங்களாசாசனம் செய்யப் பெற்றது. இக்கோயிலில் கல்வெட்டுகள் நிரம்பவுள்ளன.

இக்கோயிலுக்கு எதிரில் அன்பில் ஆலந்துறை என்ற தேவாரக் கோயில் இருக்கிறது.

### 5. உத்தமர் கோயில் (கரம்பனூர்)

புருடோத்தமன் பூர்வா தேவி.

பேரானை, குறுங்குடிஎம் பெருமானை, திருத்தண்கால்
ஊரானைக் கரம்பனூர் உத்தமனை, முத்திலங்
காரார்திண் கடல்ஏழு மலைஏழுஇவ் வுலகேழுண்டு
ஆராதென்று இருந்தோனைக் கண்டதுதென்
அரங்கத்தே

- பெரிய திருமொழி

*(ஆராமை-போதும் என்று தோற்றாமை)* ஏழு கடல்கள், உப்புக்கடல், கருப்பங் கடல், தேன்கடல், நெய்கடல், தயிர்க்கடல், பாற்கடல், புனற்கடல்.
ஏழு மலைகள்: இமயம், மந்தரம், கைலாசம், வட விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி. மேல் ஏழு உல கங்கள்: பூ, புவ, ஸுவ, மஹ, ஜந, தப, சத்தியம், கீழ் ஏழு உலகங்கள்: அதல, விதல, சுதல, நிதல, தராதல, ரஸாதல, மகா தலங்கள்.

திருச்சி சேலம் நெடுஞ்சாலையில், கொள்ளிட ஆறு கடந்து சிறிது தொலைவில் இத்தலம் இருக் கிறது. திருச்சி விழுப்புரம் குறுக்குவழி இருப்புப் பாதையில் உள்ள திருவரங்கத்திற்கு அடுத்த இரயில் நிலையம்.

இக்கோயிலுள், சிவபெருமானுக்கும், பிரமனுக் கும் கோயில்கள் இருக்கின்றன. திருமங்கையாழ்வார் ஒரே பாசுரத்தால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

### 6. திருவெள்ளறை

புண்டரீகாட்சன், பங்கயச் செல்வி
செண்பகவல்லி

இந்திர னோடு பிரமன்
ஈசன் இமையவர் எல்லாம்,
மந்திர மாமலர் கொண்டு
மறைந்து உவராய்வந்து நின்றார்,
சந்திரன் மாளிகை சேரும்
சதுரர்கள் வெள்ளறை நின்றாய்,
அந்தியம் போதிது வாகும்
அழகனே! காப்பிட வாராய்.

- பெரியாழ்வார் திருமொழி

காப்பிடல் என்னும் இத்திருமொழி நித்தியானு சந்தானத்திலுள்ளது.

*(உவராய்-மிக்க சமீபமாகவும், மிக்க தூரமாகவும் இல்லாமல் நடுவிடத்தில் இருப்பவராக; சதுரர்கள்-சமர்த்தர்கள்; அந்தியம் போது-மாலைப்பொழுது; காப்பிடுதல்-இரட்சையிடுதல் (திருவந்திக் காப்பு, பாதுகாவல்) வெள்அறை-ஸ்வேதகிரி; வெண்மை யான பாறைகளாலியன்ற மலை)*

திருச்சி-சேலம் நெடுஞ்சாலையில் சிறிது சென்று, மணச்சநல்லூர் கற்சாலையில் திரும்ப வேண்டும். உத்தமர் கோயிலிலிருந்து 7 கல் தொலைவிலும், ஸ்ரீரங்கத்திலிருந்து 10 கல் தொலைவிலும் இருக்கிறது.

உய்யக்கொண்டார் பிறந்த தலம். இலட்சுமிக்குப் பிரதானம் அதிகம் பெரியாழ்வார் 11, திருமங்கை யாழ்வார் 13 ஆக 24 பாசுரங்கள் பெற்ற தலம்.

(தொடர்ந்து வரும்)

★★★

# அம்மையப்பர்

- பேராசிரியர் டாக்டர் டி. செல்வராஜ்

சிவபெருமானின் திருவடிவங்கள் மொத்தம் அறுபத்து நான்கு என்பர் சிலர். இவற்றுள் இருபத்தைந்து திருவடிவங்களைத் தேர்ந்து 'மகேசுவர வடிவங்கள்' என்பர் சிலர். இந்தத் திருவடிவங்களில் 'அம்மையப்பர்' திருவடிவமும் ஒன்றாகும்.

### ஒருமையில் இருமை

முன்னோர் இரு வேறு வடிவங்களை ஒரே திருவடிவமாக இணைத்தனர். இத்தகைய இணைப்பு, பொதுவாக, இரு முறைகளில் நடைபெற்றது எனலாம். அவை :

*1) வலமிடமாக இணைத்தல்*

| | வலம் | இடம் |
|---|---|---|
| 1. அம்மையப்பர் | - சிவன் | + சக்தி |
| 2. சங்கரநாராயணர் | - சிவன் | + நாராயணன் |
| 3. ஆதியந்தப்பிரபு | - விநாயகர் | + அனுமன் |

*2) மேல் கீழாக இணைத்தல்*

1. நரசிங்கம் - நர உடம்பு; சிங்கத்தலை.

மேலும், பல வடிவங்கள் பலவாறு கலந்த விநாயகர், சரபேஸ்வரர், காமதேனு முதலிய ''கலவைத் திருவடிவங்களும்'' உள்ளன.

இத்தகைய இணைப்புகளால் பற்பல நன்மைகள் விளைந்தன.

1. இரு பெருந் தெய்வங்களை ஒரே திருவடிவத்தில் வழிபட்டனர்.
2. தெய்வங்கள் இணைவதால் அவர்களது பேராற்றல்களும் இரட்டிப்பாகின்றன என்று நம்பினர்.
3. அதிசயமான, அபூர்வமான திருவடிவங்கள் பல தோன்றின.
4. அத்திருவடிவங்களுக்குத் தனிக் கோட்டங்களும், சன்னிதிகளும், கோயில்களும் உருவாயின.
5. ஒவ்வொரு திருவடிவத்திற்கும் ஒவ்வோர் அடிப்படைத் தத்துவம் இருக்கிறது.
6. அவரவர் விரும்பிய திருவடிவங்களை வழிபடலாம். இரு மடங்கு பேரருள்களைப் பெறலாம்.

### அம்மையப்பர் திருவடிவம்

இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையானது. இதனை ''முதல் உரு'' என்று சிறப்பித்துக் கூறுவர். வலப்பக்கம் சிவனும், இடப்பக்கம் சக்தியும் இணைந்த திருவடிவம் இது.

இலக்கியங்களில் அம்மையப்பரைப் பற்றிய புனைந்துரைகள் பல காணப்படுகின்றன. இடச்சுருக்கம் கருதித் தேர்ந்த சில வருணனைகள் வருமாறு :-

### சங்க இலக்கியம்

ஐங்குறுநூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடல் அம்மையப்பரை,

*''நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன்''*

என்று குறிப்பிடுகின்றது.

### சிலப்பதிகாரம்

அம்மையப்பரை,

*''உமையொரு பாகத்து ஒருவன்'' (28 : 103)*

என்று இளங்கோவடிகள் சுட்டுகின்றார். ஆகவே, இவரது காலமான கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் அம்மையப்பரது திருவடிவம் வரையறுக்கப்பட்டு விளங்கியது என்பதும், ஓவியம் அல்லது சுதையால் அமைந்த அத்திருவடிவத்தைப் பக்தர்கள் வழிபட்டனர் என்பதும் புலனாகின்றன.

காலப்போக்கில் அம்மையப்பர் வழிபாடு மெல்லப் பரவியது.

## தேவாரம்

திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரத்தின் முதல் பாடல்'' தோடுடைய செவியன்'' என்று தொடங்குகின்றது. இத்தொடரால், சுவாமிகள் அம்மையப்பரையே முதன் முதலில் குறித்தார்; இதன் மூலம் அவரை வழிபட்டார்.

திருச்செங்கோடு அம்மையப்பர் எழுந்தருளிய ஒரு திருத்தலம் ஆகும். இதனைப் போற்றி திருஞான சம்பந்தர் ஒரு பதிகத்தைப் பாடியருளினார்.

1. *''பந்தணவும் விரலாள் ஒருபாகம் எழுந்தருளி''* *(பாடல் 1)*
2. *''மலைமகள் கூறுடையான்'' (பாடல் 2)*
3. *ஏலமலர்க் குழலாள் ஒருபாகம் (பாடல் 3)*

என்றெல்லாம் அம்மையப்பரைப் புனைந்துரைக்கின்றார்.

## திருவாசகம்

மாணிக்க வாசக சுவாமிகள் அம்மையப்பரை மிக அழகுற வருணிக்கின்றார். இத்திருவடிவத்தைத் ''தொன்மைக் கோலம்'' என்றும் வரையறுத்து அருளுகின்றார்:-

தோலும் துகிலும்,
குழையும் சுருள்தோடும்,
பால்வெள்ளை நீறும்,
பசுஞ்சாந்தும், பைங்கிளியும்,
சூலமும் தொக்க
வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.
(திருக்கோத்தும்பி : 18)

இப்பாடலால் அம்மையப்பரின் தோற்றப் பொலிவும், தொன்மைச் சிறப்பும் ஒருங்கே தெரிகின்றன.

## தஞ்சைவாணன் கோவை

*தஞ்சைவாணன் கோவைப்பாடல் (302) ஒன்று அம்மையப்பரை ஓர் அழகான உவமையாகப் பயன்படுத்துகின்றது.*

*''ஒரு சோலையில் களிறு தலைவியைத் துரத்தியது. அவளது அலறலைக்கேட்டு ஓடிவந்த தலைவன் அவளை இடக்கையால் பற்றி இடப்பக்கத்தில் தழுவினான். அவள் அவலத்தாலும், அச்சத்தாலும் அழுதாள். அவளது மை தடவிய கண்களிலிருந்து அலையலையாய் வடிந்த கண்ணீர் அவனது இடப்பக்கத்தைக் கருமையாக்கியது.*

*தலைவன் வலக்கையால் ஏந்திய வேலைக் களிற்றின் மீது குத்தி அழுத்தினான். அதன் புண்ணிலிருந்து அலையலையாய் வழிந்த குருதி அவனது வலப்பக்கத்தைச் செம்மையாக்கியது. அந்நிலையில் அவன் அம்மையப்பரைப் போலக் காட்சி தந்தான்!!*

*அழகிய காட்சிக்குத் தந்த அற்புதமான - மிகப் பொருத்தமான உவமை இது.*

இவ்வாறு இலக்கியங்கள் அம்மையப்பரைச் சொற் சிற்பங்களாக வடிக்கின்றன.

## பெயர்கள்

அம்மையப்பரைக் குறிக்க அர்த்த நாரி என்ற பெயரே மிகப்பயில்கின்றது. அர்த்தம் = பாதி நாரி = பெண். இடப்பாதியில் பெண்மைக் கோலத்துடன் திகழ்கின்றவர், அர்த்தநாரி.

உமையொருபகன், மாதொரு பாகன், மங்கை பங்கன், மாதியலும் பாதியன் முதலிய பல பெயர்கள் அப்பனைச் சார்ந்தவை.

அர்த்த நாரீசுவரி, பாகம் பிரியாள், அம்மை முதலியன அம்மையைச் சார்ந்தவை.

'அம்மையப்பர்' - இருவருக்கும் பொது.

## அம்மையப்பரின் தோற்றப் பொலிவு

அம்மையப்பர் ''ஒருவன்'' அல்லர்; ''ஒருத்தி'' அல்லர்; ஒருவர் ஆவர். அவரது திருவடிவம் ஒரு நோக்கில் ஒருமையில் இருமையும், மறு நோக்கில் இருமையில் ஒருமையும் உடையது.

குமரகுருபர சுவாமிகள் அம்மையப்பரை ''எந்தாய்'' என்று அன்புடன் அழைத்தார். எந்தாய் = ''எம் தந்தையே'' என்பது ஒரு பொருள்; ''எம் தாயே'' என்பது மற்றொரு பொருள்.

அம்மையப்பரின் திருவடிவத்தில் வலப்பக்கம் அப்பன் சிவனுக்கும், இடப்பக்கம் அம்மை சக்திக்கும் உரியன. இனி, இவர்களது தோற்றப் பொலிவை நிரலே தரிசிக்கலாம்.

1. **திருமுடி : சிவன் :** சடை, பிறை, கங்கை, கொன்றை
   **சக்தி :** கூந்தல்

**2. நெற்றி : சிவன் :** திருநீறு, நெற்றிக்கண்ணில் பாதி.
**சக்தி :** திலகம் (பாதி)

**3. காது : சிவன் :** மகர அல்லது சர்ப்ப குண்டலம்
**சக்தி :** தோடு

**4. கைகள் : சிவன் :** சூலம், மழு
**சக்தி :** கிளி, வளையல், மலர், கண்ணாடி

**நான்கு கைகள் :** ம்ழு, சூலம், அபயம், வரதமுடையவை.

**மூன்று கைகள்**

**சிவன் :** இரு கைகள்; இடபத்தின் மீது ஒரு கை இருக்கும்.

**சக்தி :** ஒரு கை.

**5. ஆடை : சிவன் :** புலித் தோலாடை; முழங்கால் வரை நீண்டது.
**சக்தி :** துகிலாடை; கணைக்கால் வரை நீண்டது.

**6. திருவடி :** சிவன் : காப்பு; கழல்
**சக்தி :** சிலம்பு

**7. வண்ணம் :** சிவன் : செம்மை
**சக்தி :** பசுமை.

**திருவடிவம் தோன்றிய வரலாறு**

அம்மையப்பர் திருவடிவம் தோன்றியதற்கான புராண வரலாறுகள் பல உள்ளன. இவற்றில் பிருங்கி முனிவர் வரலாற்றை எல்லாரும் அறிவர்.

பிருங்கி முனிவர் சிவனைத் தவிர வேறு தெய்வங்களை வழிபடமாட்டார். ஒரு முறை இவர் கைலாசம் சென்றார். அங்கே சிவனை மட்டும் வழிபட்டு வலம் வந்தார். சினமுற்ற சக்தி சிவனருகில் மிக நெருக்கமாக நின்றார். உடனே முனிவர் ஒரு சிறு வண்டின் வடிவெடுத்து, ஓர் இடைவெளியின் வழியாக சிவனை இரண்டாம் முறையாக வலம் வந்தார்.

சக்தி மேலும் சினந்து முனிவரது உடற்சக்திகளை ஈர்த்துக் கொண்டார். முனிவர் உடல் தளர்ந்தார்; செயலற்றார்.

சக்தி சிவனை வழிபட்டு, அவனது இடப்பாகத்தில் ஒன்றி இணைந்தார். முனிவர் அம்மையப்பரைத் தரிசித்து, அருள் பெற்று, வலம் வந்தார். அம்மையப்பரின் பேராற்றலை உணர்ந்தார்.

சில தலங்களில் அம்மையப்பரின் திருவடிவத்திற்கு அருகில் பிருங்கி முனிவரது வடிவத்தையும் காணலாம்.

**திருத்தலங்கள்**

**1. திருச்செங்கோடு:** இளங்கோவடிகள் திருச்செங்கோட்டை ''நெடுவேள் குன்றம்'' என்று குறிப்பிடுகின்றார். 'கொடி மாடச் செங்குன்றூர்' என்பது இதன் மற்றொரு பெயர்.

பொதுவாக, சிவன் கோயில்களில், கருவறையில் சிவலிங்கமே மூலவராக எழுந்தருளியிருப்பது மரபு. ஆனால், திருச்செங்கோட்டில் அர்த்தநாரியே மூலவராக வீற்றிருப்பது தனிச்சிறப்பு. சுவாமியின் திருவடிவம் கம்பீரமானது; ஏறக்குறைய ஐந்தடி உயரமானது. இது சுயம்பு என்று ஒரு சிலரும், நவபாஷாணத்தால் செய்யப்பட்டது என்று ஒரு சிலரும் கருதுகின்றனர்.

திருவடிவம் மேற்கு நோக்கி இருப்பது ஒரு சிறப்பு. திருவடிகளின் கீழே புனித தீர்த்தம் ஊறிக் கொண்டே இருக்கிறது. இது தீர்த்தப் பிரசாதமாகவும் வழங்கப்பெறுகிறது.

திருச்செங்கோட்டு அர்த்த நாரியைத் திருஞான சம்பந்த சுவாமிகளும், வேலவரை அருணகிரிநாத சுவாமிகளும் போற்றிப் பாடினர். இங்கே ஆதிகேசவப் பெருமாள் சன்னிதியும் உள்ளது.

**2. பல்லவர் காலம்**

**மாமல்ல புரம் :** இங்குள்ள தர்மராசா ரதத்தின் மேற்குச் சுவரில் நான்கு கைகளுடன் கூடிய அம்மையப்பரின் அழகான திருவடிவம் ஒன்று காணப்படுகிறது.

கடற்கரைக் கோயில் கொடிக்கம்பப் பகுதியில் வீணை ஏந்திய அம்மையப்பரின் எழில் மிகு தோற்றம் காணத்தக்கது.

மேற்கண்ட சிற்பங்கள் இரண்டும் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

காஞ்சி கயிலாச நாதர் கோயிலிலும் திருச்செங் காட்டங்குடியிலும் உள்ள அம்மையப்பரின் திருவடிவங்களும் பல்லவர் காலத்தைச் சார்ந்தவை.

**சோழர் காலம்**

சிவன் கோயில்களில் கருவறையின் மேற்குப் புறக் கோட்டத்தில் லிங்கோற்பவர் அல்லது மகா விஷ்ணு அல்லது அம்மையப்பரை எழுந்தருளச்

செய்வது மரபும், விதியும் ஆகும். சோழர் காலத்தில் தோன்றிய பல கோயில்களில் அம்மையப்பர் கோட்டத் தெய்வமாக விளங்குகின்றார்.

மேலைக்கடம்பூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், கும்பகோணம், நாகேசுவரம் முதலிய சோழர் காலக் கோயில்கள் பலவற்றில் அம்மையப்பரின் திருவடிவத்தைக் காண முடியும். திருவெண்காட்டில் இருந்த அம்மையப்பர் சிலையொன்று இப்போது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.

### நாயக்கர் காலம்

திருமலை நாயக்கர் காலத்தில் வடிக்கப்பெற்ற அம்மையப்பர் சிலையொன்று மதுரைப் பெருங் கோயிலில் இருக்கிறது.

அம்மையப்பரின் திருவடிவங்களில் அவர்கள் இணைந்த அடிப்படை அமைப்பு மாறுவதில்லை. ஆனால் கைகளின் எண்ணிக்கை, அமைப்பு, அவை ஏந்திய பொருள்கள் முதலியவற்றால், சிற்சில மாறுபாடுகள் இருப்பது கவனிக்கத்தக்கது.

### திருவண்ணாமலை - செப்புச் சிலைகள்

திருக்கார்த்திகைத் தீபத்தன்று மாலையில், திருவண்ணாமலைக் கோயிலில் பஞ்சமூர்த்திகளும், அம்மையப்பரும் சன்னிதிகளுக்கு வெளியே எழுந்தருளுகின்றனர். பின்னர் மலையுச்சியில் தீபம் ஏற்றப்படுகிறது. அம்மையப்பர் எழுந்தருளக் காரணம் யாது?

சக்தி இல்லாத சிவம் சவம் என்பது ஓர் உலக வழக்கு. சிவன் எப்போதும் சக்தியுடன் இணைந்தே இருக்கவேண்டும். சிவன், தன் இடப்பக்கத்தைச் சக்திக்கு அருளிய தலம் திருவண்ணாமலை என்பர். எனவே, தீபத்தன்று இறைவன் அம்மையப்பராக எழுந்தருளி அனைவருக்கும் அருள் சுரக்கின்றார்.

திருவண்ணாமலையிலுள்ள அம்மையப்பரின் செப்புச் சிலை மிகவும் அழகானது. இத்தகைய மேலும் சில செப்புச் சிலைகளைத் திருச்செங்கோட்டிலும், சென்னை அருங்காட்சியகத்திலும் காணலாம்.

### அம்மையப்பரும், சங்கர நாராயணரும் :

சங்க காலத்தில் சிவனும், உமையும், நாராயணனும் தலைமைத் தெய்வங்களாகப் போற்றப்பெற்றனர். சிவனையும், உமையையும் இணைத்து அம்மையப்பரின் திருவடிவத்தையும், சிவனையும், நாராயணனையும் இணைத்துச் சங்கர நாராயணர் திருவடிவத்தையும் உருவாக்கினர். இந்தத் திருவடிவத்தை அகநானூற்றின் ஒரு பாடல் (எண். 360) வருணிக்கின்றது.

மேற்கண்ட இரு திருவடிவங்களில் வலப்பக்கம் சிவன் ஒருவனுக்குரியது. இடப்பக்கம் உமைக்கும், நாராயணனுக்கும் உரியது. எனவே, சிவனுக்கு உமை ஒரு சக்தி; இது பெண் வடிவானது. நாராயணன் மற்றொரு சக்தி; இது ஆண் வடிவானது.

நாராயணன் சிவனின் சக்தி வடிவமாகத் திகழ்வதால், சிவனைப் ''பெருமான்'' என்று ஆண்பாலிலும், நாராயணனைப் ''பெருமாள்'' என்று பெண்பாலிலும் வழங்குகின்றனர். திருநாவுக்கரசு சுவாமிகளும்

*''அரியலால் தேவி இல்லை ஐயன்*
*ஐயாற னார்க்கே''*

என்று அரியைச் சிவனின் தேவி என அருளினார்.

எனவே, அம்மையப்பர், சங்கர நாராயணர் திருவடிவங்கள் சிவசக்தியின் மாற்று வடிவங்களே என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அம்மையப்பர் = சைவ சாக்த - இணைப்பு
சங்கர நாராயணன் = சைவ வைணவ - இணைப்பு

### தத்துவ உட்பொருள்கள்

அம்மையப்பரின் திருவடிவத்தால் உணரலாகும் தத்துவ உட்பொருள்கள் சில வருமாறு :-

1. அம்மையப்பரின் திருவடிவம் போக வடிவம். உயிரினங்கள் தோன்றவும், போகம் துய்க்கவும், வளரவும் இந்தத் திருவடிவமே பெருங்கருணையையும், பெருஞ்சக்தியையும் அளிக்கிறது. ஆகவே, இதனை ''முதல் உரு'' என்றும் ''தொன்மை வடிவம்'' என்றும் சிறப்பிக்கின்றனர்.
2. உலக உயிர்கள் அனைத்திற்கும் அம்மையப்பரே தாயும், தந்தையும் ஆவர். அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று திருக்களிற்றுப்படியார் வரையறுக்கிறது.
3. ''சக்தியின்றிச் சிவமில்லை; சிவமின்றிச் சக்தியில்லை'' என்ற ஓர் அடிப்படைத் தத்துவத்தை அம்மையப்பரின் திருவடிவம் நிலைநாட்டுகிறது.
4. அம்மையப்பரின் திருவடிவில் ஆண் + பெண், வன்மை + மென்மை, வெம்மை + தண்மை முதலிய முரண்பட்ட இரு பொருள்களும் பண்புகளும் இணைந்து இயங்குவதால் வரம்பற்ற பல செயல்கள் நிகழ்கின்றன; திகழ்கின்றன.

★ ★ ★

# பரமனடி காட்டும் கோதை தமிழ்

- முனைவர் சீ. இரகு
தமிழ் விரிவுரையாளர், தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி, பட்டாபிராம்.

### ஆண்டாள் அவதாரம்

ஸ்ரீவில்லிபுத்தூர் நந்தவனமொன்றில் துளசி மலரில் ஆண்டாள் அவதரித்ததாகக் கூறுவது வைணவ மரபாகும். நள ஆண்டு ஆடிமாதம் சுக்கில பட்ச மாகிய வளர்பிறையில் சதுர்த்தி திதியில் செவ்வாய்க் கிழமையில் பூரநட்சத்திரத்தில் பூமிப்பிராட்டியின் அம்சமாய்க் கோதைநாச்சியார் அவதரித்தார்.

வைணவக் குருபரம்பரை நூல்களில் ஆண்டா ளின் காலமாகக் கி.மு. 3005 குறிக்கப்பட்டுள்ளது. எனினும் திருப்பாவையின் பாசுரமொன்றில் இடம் பெற்றுள்ள 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று' (பாசுரம் : 13) என்ற தொடரை ஆழ்ந்த ஆய்விற்கு உட்படுத்தி, கி.பி. 885 என்ற ஆண்டைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண் டின் கடைப்பகுதியாக ஆண்டாளின் காலத்தை வானியல் அறிஞர்கள் அறுதியிடுகின்றனர்.

### சூடிக்கொடுத்த சுடர்க்கொடி

பெரியாழ்வாரால் மலர்வனத்தில் கண்டெடுக்கப் பட்டுப்பாசத்துடன் வளர்க்கப்பட்ட குழந்தையான ஆண்டாள், தன் வளர்ப்புத் தந்தையாரின் மலர்க் கைங்கர்யத்திற்குத் துணை புரிந்து வாழ்ந்தவளாக அறியப்படுகிறாள். வட பத்ர சாயிக்காக அவர் தொடுத்த மாலைகளை, அவருக்குத் தெரியாமல் தானணிந்து கண்ணாடியில் நாளும் அவள் அழகு பார்த்து வந்தாள். ஒருநாள் அம்மலர் மாலையில் தலைமுடி ஒன்றைக் கண்டு, அது வந்தவிதம் அறிந்து, ஆண்டாளை வன்மையாகப் பெரியாழ்வார் கடிந்து கொள்கிறார். அவளால் அணிந்து அவிழ்க்கப்பட்ட மாலைகளைத் திருமாலுக்கு அணிவிக்கவும் மறுத்து விடுகிறார். அன்றிரவே ஆழ்வார் கனவில் பெருமாள் தோன்றிக் கோதை சூடிக்கொடுத்த மாலையே தனக்கு வேண்டுமென்று கேட்பதால், மறுநாள் முதல் ஆண்டாள் சூடிக்களைந்த மாலைகளையே, பெருமா ளுக்குப் பெரியாழ்வார் சூட்டிவருகிறார். அன்று முதல் ஆண்டாள் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்று அழைக்கப்பட்டாள்.

### புதுமைத் திருமணம்

நாட்பட நாட்படத் திருமால் மீதான காதல் ஆண்டாளிடம் வளர்ந்து பெருகுவதால், அரங்கனை யன்றி வேறொருவரையும் மணவேன் என்று பெரி யாழ்வாரிடம் உறுதியாகக் கோதை கூறிவிடுகிறாள். ஆழ்வார் கனவில் வரும் பெருமாளும, ஆண்டாளைத் திருமணத்திற்காகத் திருவரங்கத்திற்கு அழைத்து வருமாறு பணிக்கிறார். திருவரங்கத்தில் அர்ச்சாரூபி யான சிலைவடிவ திருவரங்கநாதனுக்கும் மானிடப் பெண்ணான ஆண்டாளுக்குமிடையில், பெரியாழ் வார் தலைமையில் உலகில் எங்கும் இல்லாத வகை யில் புதுமைத் திருமணம் நிகழ்வதாகக் குருபரம்பரை நூல்களில் சுவைபட விவரிக்கப்பட்டுள்ளது.

### திருநாமங்கள்

அன்பினால் ஆண்டவனையும், அருளிச் செய்த பிரபந்தங்களால் உலகோரையும் உய்வித்து அடிமை கொள்பவளெனப் பொருள்படும் வகையினில், 'ஆண் டாள்' எனும் திருநாமம் கொண்டு, மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லாத வைராக்கியத்துடன் திகழ்ந்த இப்பெண்ணாழ்வாருக்குக் கோதை, சூடிக் கொடுத்த சுடர்க்கொடியார், நாச்சியார், ஆழ்வார் திரு மகளார் எனும் பல்வேறு பெயர்கள் வைணவ சமயத் தில் வழங்கப்பெறுகின்றன. மேலும் சின்னஞ்சிறு வயதிலேயே பக்தியில் முதிர்ந்தவள் என்பதால், பிஞ்சாய்ப் பழுத்தவள் என்ற சொற்றொடராலும் ஆண்டாள் விளிக்கப்படுகிறாள்.

### பிரபந்தங்கள்

பிற ஆழ்வாரின் அன்பெல்லாம் பள்ளத்திலிருந்து மேடேறும் நீராய்ச் செயற்கையானதென்றும், ஆண் டாளின் அன்பு மட்டும் மேட்டிலிருந்து பள்ளத்தில் பாயும் நீராய் இயற்கையானதென்றும், வைணவப் பெருமக்களால் குறிப்பிடப் பெறுகிறது. இத்தகு உயர்ந்த அன்பிற்கு உரிமையுடைய ஆண்டாளால் அருளிச் செய்யப்பெற்றுள்ள பிரபந்தங்களாக முப்பது பாசுரங்களுள்ள (30) திருப்பாவையும், நூற்று நாற்

பத்து மூன்று பாசுரங்களுள்ள (143) நாச்சியார் திருமொழியும் திகழ்கின்றன. இவ்விரு பிரபந்தங்களும் உலகத் தளைகளிலிருந்து ஆன்மா விடுபடுவதற்குரிய 'உய்யும்' வழிகளைத் தெளிவுபடுத்துவதைப் பொதுப் பாடுபொருளாகக் கொண்டுள்ளன.

**திருப்பாவை**

நாலாயிரத்திவ்வியப் பிரபந்தங்களிலுள்ள பாசுரங்ளைப் பாடினால் கிடைக்கும் பலன் முப்பது திருப்பாவைப் பாசுரங்களைப் பாடினாலே கிடைக்கும் என்பதைத் தன் குருவழி அறிந்த ஸ்ரீ இராமானுஜர், எப்பொழுதும் திருப்பாவையையே பாடித் 'திருப்பாவை சீயர்' என்றே அழைக்கப்பட்டார். சங்ககால மகளிரிடையே நிலவிவந்த 'தைந்நீராடல்' வழக்கத்தையே, பாவை நோன்பாகத் திருப்பாவையில் ஆண்டாள் பாடியுள்ளதாகக் கொள்ளலாம். இப்பாவை நோன்பிற்குரிய கட்டுப்பாடுகளை,

"நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்"

என்று திருப்பாவையின் இரண்டாம் பாசுரத்தில் எடுத்துரைக்கும் ஆண்டாள், இருபத்தியேழாம் பாசுரத்தில்,

"சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து, முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

என்று நோன்பின் முடிவையும் தெளிவுறுத்துகின்றாள்.

திருமாலைக் கண்டு, அவன் உவந்த அடிமை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் நெஞ்சுள் பெருகி உள்ளடங்காமல் சொற்களில் வழிந்ததோர் இறையனுபவப் பிரபந்தமே திருப்பாவையாகும். உறுதிப் பொருளை அடைவதற்கான ஆயர்மகளிரின் முன்னேற்பாடுகளைப் பாவை நோன்பாக உருவகித்துக் கோதை நாச்சியாரால் பாடப்பட்டுள்ள திருப்பாவை, அளவில் சிறியதொரு நூலானாலும், வேத உபநிடதங்களின் வித்தாகவும் - பிழிவாகவும், கருதப்படுமளவிற்குப் பெருமை பொருந்தியதொரு பிரபந்தமாகவும் திகழ்கின்றது.

அரிதினும் அரிதான யாப்பு வகையான இயல் தரவிணைக் கொச்சகக்கலிப்பாவால் இயற்றப்பட்டதாகத், திருப்பாவை அமைந்துள்ளது. இத்திருப்பாவையிலுள்ள முப்பது பாசுரங்களில் திருமாலே முழு முதல் பரம்பொருள் எனும் பரத்துவம் நிலைநாட்டப்பட்டுத் திருமாலுக்கு அடிமைத்தொண்டு புரிந்து வாழ்தலே ஆன்மாவிற்கு மெய்யான பேரின்பம் நல்குமென்பதும் சுட்டப்பெறுகின்றது.

திருப்பாவையிலுள்ள முப்பது பாசுரங்களில் பாவை நோன்பு பற்றிய பொதுவான செய்திகளைக் கூறுபவையாக முதல் ஐந்து பாசுரங்கள் அமைந்துள்ளன. தோழிமார்களைத் துயிலெழுப்பி நீராட வருமாறு ஆய்ச்சியர் அழைப்பதாக, ஆறுமுதல் பதினைந்து வரையுள்ள பாசுரங்கள் பாடப்பட்டுள்ளன.

"மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்!"

எனும் ஐந்தாவது பாசுரம், பாவை நோன்பு நோற்றுத் திருமாலைப் பற்றினால் பிழைகள் யாவும் தீயினுள் தூசாகும் என எடுத்துரைக்கின்றது. பன்னிரண்டாம் பாசுரத்தில் தோழியை விளிக்கும் பெண்ணொருத்தியின் குரல்,

"சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்"

என்று ஆண்டாளால் அழகாகக் காட்டப்பட்டுள்ளது.

கண்ணனையும் நீராட அழைத்துச் செல்ல வேண்டும் என்று ஆயர்பாடிப் பெண்கள் எண்ணி, அவனது மாளிகைக்குச் சென்று, கண்ணனைத் துயிலுணர்த்துபவையாகப் பதினாறு முதல் இருபத்தொன்பது வரையுள்ள பாசுரங்கள் திகழ்கின்றன.

"ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்"

*(பாசுரம் : 21)*

என்று இங்குப் பரந்தாமன் துயிலுணர்த்தப்படுகிறான். திருப்பாவையைப் பாடுபவர்கள் அடையும் பலனைத் திருப்பாவையின் முப்பதாவது பாசுரம்

"சங்கத் தமிழ்மாலை முப்பதுந் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய்"

என்று குறிப்பிடுகின்றது.

## நாச்சியார் திருமொழி


திருமாலை நினைத்தவுடன் சேர்ந்துவிட வேண்டும் என்று நெஞ்சத்திற்குள் ஊறிப் பொங்கிய காதல், உள்ளடங்காமல் மீதூர்ந்து இன்ப வெள்ளமாய் வெளிப்போந்த பிரபந்தமே நாச்சியார் திருமொழி யாகும். கிருஷ்ணனுடன் கலக்கப் பெற வேணு மெனும் அளவற்ற ஆவேசத்தைக் கோதை கொள் கிறாள். ஆயர் மகளாகத் தன்னைப் பாவித்துக் காமன் காலில் விழுகிறாள். மாயனைச் சிற்றில் சிதைய வேண்டாமெனக் கேட்டுக் கவர்ந்த கூறைகளைத் திரும்பப் பெறும் முயற்சியில் ஈடுபடுகிறாள். கிருஷ்ண னைப் பற்றுவதற்காகக் கூடல் இழைக்கிறாள். குயிலைக் கூவிக் கண்ணனோடு கூட்டும்படி வேண்டு கிறாள்.

திருமணக்கனவு கண்டும், பாஞ்சசன்னிய சங்கின் அனுபவத்தில் திளைத்தும், மேகத்தைத் தூதுவிட்டும், திருமாலிருஞ்சோலை நம்பியைத் தொழுகிறாள். பிரிவாற்றாமையால் புலம்புகிறாள். திருவரங்கரைக் காமுற்றுக் கண்ணனிடம் சேர்க்குமாறும், அவன் மனம் உகந்த பொருள்களுள் ஒன்றைத் தருமாறும் கேட் கிறாள். இறுதியாகப் பிருந்தாவனத்தில் கண்டு கண்ணனைப் பற்றுகிறாள். இச்செய்திகளின் தொகுப் பாக நாச்சியார் திருமொழி அமைந்துள்ளது.

நாச்சியார் திருமொழியிலுள்ள நூற்று நாற்பத்து மூன்று பாசுரங்களில், திருமாலைப் பற்றும் முயற்சி யில் எதிர்கொள்ள வேண்டிய இடர்கள் சுட்டப் பெறு கின்றன. கொண்ட குறிக்கோளில் உறுதியாய் நிற்க வேண்டும் என்பது வலியுறுத்தப் பெற்றுச் சிற்றின்பத் தொடர்புடைய மனித காமத்தைப் பேரின்பத் தொடர்பு டைய பகவத் காமமாக, இப்பிரபந்தத்தில் ஆண்டாள் மடைமாற்றம் செய்துள்ளதாகக் கொள்ளலாம். இதற்குச் சிறந்த சான்றாக,

''தையொரு திங்களும் தரைவிளக்கித் தண் மண்டல
மிட்டு மாசி முன்னாள்
ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து அழகினிக்
கலங்கரித்து அனங்கதேவா
உய்யவுமாங் கொலோ வென்று சொல்லி உன்னையம்
உம்பியையும் தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற்கு
என்னை விதிக்கிற்றியே''

என்னும் நாச்சியார் திருமொழியின் தலைப்பாசுரத் தைச் சுட்டலாம்.



## மங்களாசாசனம்

வைணவத்தில் நூற்றெட்டுத் திவ்விய தேசங்கள் உள்ளன. இவற்றுள் திருவரங்கம், திருத்தலைச் சங்க நாண்மதியம், திருக்குடந்தை, திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, திருவில்லிபுத்தூர், திருவேங் கடம், திருவடமதுரை, திருத்துவாரகை, திருவாய்ப் பாடி, திருப்பாற்கடல் என்னும் பன்னிரண்டு திவ்விய தேசங்களை ஆண்டாள் மங்களாசாசனம் செய்துள் ளாள். வைணவத்தில் திருமாலுக்குப் பத்து அவதாரங் கள் கூறப்பெறுகின்றன. புகழ்வாய்ந்த இத்தசாவதாரங் களுள் கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பலரா மன், இராமன், கிருஷ்ணன் ஆகிய ஏழு அவதாரங் களை ஆண்டாள் மங்களாசாசனம் செய்துள்ளாள்.

## வைணவச்சுடர்

தமிழ் இலக்கியத்தில் ஆண்டாளின் இடம் தனிச் சிறப்பிற்குரியதாகும். பன்னிரு ஆழ்வார்களுள்ளும் ஆண்டாளின் அன்பே தலைமையானதாக வைணவப் பெரியோர்களால் கருதப்பெறுகின்றது. நாயகி பாவத் தைக் கற்பனையாற்றலுடனும் கலைநுட்பத்துடனும் கையாண்ட வைணவச்சுடராகக் கோதை நாச்சியார் திகழ்கின்றாள். இப்பெண்ணாழ்வாரின் படைப் பாளுமைக்குப் பின்வரும் வைணவமரபுப் பாடல் சிறந்த சான்றாகும்.

''பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும் - கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு''

★★★

# மனதிற்கும் அறிவுக்கும் இடையே ஒரு உரையாடல்

## (திருப்புகழிலிருந்து)

- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

அடியேன் என் தந்தையின் அன்புக் கட்டளைக் கிணங்கி, வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகளிடம் திருப்புகழ் பாடம் கேட்டு வருவது வழக்கம். ஒரு சமயம், திருவண்ணாமலைத் திருப்புகழ் ''விடமு மமுதமும்'' எனத் துவங்கும் பாடலை தேவகாந்தாரி ராகத்தில் கற்றுத் தந்தார். அதில் முதல் 4 அடிகளில் பொதிந்துள்ள கருத்துக்களையே ஆராய்ச்சி செய்ததின் பயனை எங்களுக்கு ''மனதுக்கும் அறிவுக்கும் சம்பாஷணை'' எனும் தலைப்பில் கற்றுத் தந்தது அடியேனது வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு பெரிய திசை திருப்பத்திற்கு வழிகோலியதை நினைக்கும்தோறும் உடல் புல்லரிக்கச் செய்கிறது.

இந்த அருமைத் திருப்புகழில் முதல் நான்கு அடிகள் விலக்கணியின்பாற்படும். ''கடுவும் அமிர்தமும் விரவிய விழியினர்'' என மற்றோர் திருப்புகழ் பாடல் இதற்கு அணி சேர்க்கிறது. அருணகிரியார் பாடிய பாடல்களில், அமரர் வ.த. சுப்பிரமணியப்பிள்ளை அவர்களால் புத்தக வாயிலாக இன்று நமக்கு கிடைத்த பாடல்கள் 1303. மேற்கூறிய ''விடமும் அமுதமும்'' பாடல் ஒன்று மட்டுமே மணிவாசகர் பாடி அருளிய திருச்சாழல் பதிகத்திற்கு ஏற்ப அமைந்துள்ளதைப் பார்க்கலாம். இப்பாடலில் காம வலையில் வீழ்த்தும் பதியிலாரை மக்கள் உணரவேண்டும் என்னும் கருத்தில் அமைத்துப் பாடி உள்ளதை, எங்கள் குருநாதர் எந்த அளவு திருப்புகழ் பாக்களை ஆராய்ச்சி செய்திருந்தால் இப்பாடலை மட்டுமே தேர்வு செய்து அதனை ''மனதுக்கும் அறிவுக்கும் இடையே ஒரு உரையாடல்'' என்னும் தலைப்பில் விரிவாக்கம் செய்திருப்பார்? குருநாதருக்கு திருப்புகழில் உள்ள ஆழ்ந்த பக்தியும் ஆராய்ச்சி திறனும் இதனால் சிறப்புற விளங்குகின்றது.

எத்தனையோ அறிவுள்ளோர், புலமையுள்ளோர் பலரும் திருப்புகழ் பாடல்களுக்கு விளக்கம் தந்துள்ள போதிலும், இதனை அன்றும் இன்றும் சரி யாவராலும் நினைக்க முடியாத ஓர் எளிய முறையில் மக்கள் யாவரும் உணரும் வகையில் தொகுத்துள்ள வகையினை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது எனலாம்.

முதற்கண் கீழே கொடுத்துள்ள பாடல் முழுவதையும் ஒருமுறை படிக்கவும்.

விடமு ம்அமுதமும் மிளிர்வன இணைவிழி
வனச மல தழல் முழுகிய சரமென
விரைசெய் ம்ருகமத அளகமு முகிலல வொருஞான
விழியின் வழிகெட இருள்வதொ ரிருளெம
மொழியு மமுதல வுயிர்கவர் வலையென
விழையு மிளநகை தளவல களவெம வியனாபித்

தடமு மடுவல படுகுழி யென இடை
துடியு மல மத னுருவென வனமுலை
சயில மலகொலை யமனென முலைமிசை புரள் கோவை

தரள மணியல யமன் விடு கயிறென
மகளிர் மகளிரு மலபல வினைகொடு
சமையு முருவென வுணர்வோடு புணர்வது மொரு நாளே.

அடவி வனிதையர் தனதிரு பரிபுர
சரண மலரடி மலர்கொடு வழிபட
அசல மிசைவினை புனமதி லினிதுறை தனிமானும்

அமர ரரிவையு மிருபுடை யினும்வர
முகர முகபட கவள தவளகர
அசல மிசைவரு மபிநவ கலவியும் விளையாடுங்;

கடக புளகித புயகிரி சமுகவி
கடக கசரத துரகத நிசிசரர்
கடக பயிரவ கயிரவ மலர்களும் எரிதீயுங்-
கருக வொளிவிடு தனுபர கவுதம
புநித முநிதொழ அருணையி லறம்வளர்
கருணை யுமைதரு சரவண சுரபதி-பெருமாளே

இப்பாடலின் முதல் நான்கு அடிகளின் கருத்துக்களை மட்டும் இனி பார்ப்போம்.

விஷமும் அமுதமும் இரண்டும் கொண்டு விளங்கு கின்ற இரு விழிகளும் (குளிர்ந்த) தாமரையல்ல, நெருப்பில் தோய்ந்த அம்புகளாம் என்றும்; நறுமணம் கமழும் கஸ்தூரி வாசனை கொண்ட கூந்தலும் மேகம் அன்று ஒப்பற்ற ஞான விழி நாடும் வழியை மறைக் கும் இருளைத்தரும் தனி இருளாம் என்றும், பேச்சும் அமுதம் அன்று, உயிரையே கவரும் வலையாம் என்றும், விரும்பும் காமத்தை ஊட்டும் பற்கள் (தள வன்று களவாம் என்றும்) முல்லையரும்பு அன்று திருட்டுத்தனத்தை தம்மாட்டு ஒளித்து வைத்துள்ளவை களாம் என்றும்; வியப்பைத் தரும் தொப்புள் என்னும் இடமும் மடு (ஆற்றிடைப்பள்ளம்) அன்று, படுகுழி யாம் என்றும், இடையானது துடி அன்று மன்மதனது உருவமாம் என்றும், அழகிய கொங்கை மலையன்று கொலை செய்யும் யமனே என்றும் கொங்கையின் மேல் புரளுகின்ற கோத்த வடம், முத்துமாலை-ரத்னமாலை அன்று யமன் விட்ட பாசக் கயிறே ஆம் என்றும், மாதர்கள் மாதர்கள் அல்ல பல வினைகள் சேர்ந்து அமைந்த உருவமே என்றும், காணவல்ல ஞான உணர்ச்சியுடன் கூடும் ஒருநாள் எனக்குக் கிடைக்குமா?

மேலே கூறிய கருத்துகளுக்கேற்ப வள்ளிமலை சுவாமிகள் ''மனதுக்கும் அறிவுக்கும்'' எனும் தலைப் பில் அமைத்து பாடம் கற்றுத் தந்தார்.

மனம்: விடமும் அமுதமும் மிளிர்வன இணை விழி வனசம் - அது வனசம்.

அறிவு: விடமும் அமுதமும் மிளிர்வன இணை விழி வனசம் அல்லவே - விழி வனசம் அல்லவே.

மனம்: மற்ற அது எதுவோ? விழி எதுவோ?

அறிவு: விடமும் அமுதமும் மிளிர்வன இணைவிழி வனசமல்ல தழல் முழுகிய சரமே - செந் தழல் முழுகிய சரமே.

மனம்: சரிசரி சரிசரி சரியே அது சரியே

அறிவு: மற்றதைச் சொல்வாய், உன் அனுபவம் சொல்வாய்

மனம்: விரை செய் மருகமத அளகமும் முகிலே - கரு முகிலே

அறிவு: விரை செய் மருகமத அளகமும் முகில் அல்லவே அது முகில் அல்லவே.

மனம்: மற்ற அது எதுவோ? அளகம் எதுவோ?

அறிவு: ஞான விழியின் வழிகெட இருள்வதோர் இருளே-காரிருளே

மனம்: சரிசரி சரிசரியே அது சரியே

அறிவு: மற்றதைச் சொல்வாய். உன் அநுபவம் சொல்வாய்.

மனம்: மொழியும் அமுதம் (மகளிர்) மொழியும் அமுதம்

அறிவு: மொழியும் அமுதம் அல்லவே. மொழியும் அமுதம் அல்லவே.

மனம்: மற்ற அது எதுவோ? மொழி எதுவோ?

அறிவு: மொழியும் அமுது அல உன் உயிர்கவர் வலையே (உன் உயிர் கவர்) பாசவலையே.

மனம்: சரி சரி சரி சரியே அது சரியே

அறிவு: மற்றதைச் சொல்வாய், உன் அநுபவம் சொல்வாய்

மனம்: விழையும் இளநகை தளவே - நகை தளவே

அறிவு: விழையும் இளநகை தளவல்லவே, நகை தளவல்லயே

மனம்: மற்ற அது எதுவோ? நகை எதுவோ?

அறிவு: விழையும் இளநகை தளவல களவே - பொய் களவே

மனம்: சரி சரி சரி சரியே அது சரியே.

அறிவு: மற்றதைச் சொல்வாய், உன் அநுபவம் சொல்வாய்

மனம்: வியன்நாபித் தடமும் மடுவே - காம மடுவே

அறிவு: வியன் நாபித் தடமும் மடுவ(ல்)லவே-தடம் மடுவல்லவே

மனம்: மற்ற அது எதுவோ? மடு எதுவோ?

அறிவு: வியன் நாபித் தடமும் மடுவல - படுகுழியே உனை வீழ்த்தும் படு குழியே.

மனம்: சரி சரி சரி சரியே அது சரியே

அறிவு: மற்றதை சொல்வாய் உன் அநுபவம் சொல்வாய்

மனம்: இடை துடியே - மகளிர் இடை துடியே

அறிவு: இடை துடியல்லவே - துடி அல்லவே

மனம்: மற்ற அது எதுவோ? இடை எதுவோ?

அறிவு: இடை துடியுமல - மதன் உருவே, மன்மதின் உருவே

மனம்: சரி சரி சரியே அது சரியே

அறிவு: மற்றதைச் சொல்வாய், உன் அநுபவம் சொல்வாய்

மனம்: வனமுலை சயிலம் - முலை சயிலம்

அறிவு: வனமுலை சயிலமல்லவே - சயிலம் அல்லவே

மனம்: மற்ற அது எதுவோ - முலை எதுவோ?

அறிவு: வன முலை சயிலமல - கொலை எமனே, உன்னை கொல்ல வந்த எமனே.

மனம்: சரி சரி சரி சரியே அது சரியே

அறிவு: மற்றதைச் சொல்வாய், உன் அநுபவம் சொல்வாய்.

மனம்: முலைமிசை புரள் கோவை தரள மணியே - ரத்ன மணியே

அறிவு: முலைமிசை புரள் கோவை தரள மணியல் லவே, தரள மணியல்லவே

மனம்: மற்ற அது எதுவோ? மணி எதுவோ?

அறிவு: முலைமிசை புரள் கோவை தரள மணியல - எமன் விடு கயிறே! பாசக் கயிறே!

மனம்: சரி சரி சரியே அது சரியே

அறிவு: மற்றதைச் சொல்வாய், உன் அநுபவம் சொல்வாய்

மனம்: மகளிர் மகளிர் நல்ல மகளிர்

அறிவு: மகளிர் மகளிரும் அல்லவே - நல்ல மகளிர் அல்லவே

மனம்: மற்ற அவர் எவரோ? அம் மகளிர் எவரோ?

அறிவு: மகளிர் மகளிரும் அல - பல வினைகொடு சமையும் உருவே! மாயை உருவே!

அறிவு: மற்றதைச் சொல்வாய் உன் அநுபவம் சொல்வாய்

மனம்: என் அநுபவத்தை சொல்வேன்.

''மூலமந்திரம் ஓதலிங்கிலை; ஈவதிங்கிலை
நேயமிங்கிலை
மோனமிங்கிலை ஞானமிங்கிலை''
- இதுவே என் அனுபவம்

அறிவு: அப்படியானால் எதில்தான் ஈடுபாடு?

மனம்: மடவார்கள் மோகமுண்டு அதிதாகமுண்டு அபசாரமுண்டு, இடுமூகன் என்றொரு பேரு முண்டு.

அறிவு: அறிந்தேன் உன் அனுபவம் அறிந்தேன்
அந்தோ மனமே நமதாக்கையை நம்பாதே

மனம்: நம்பாமல் என்ன செய்வது; நான் என்ன செய்வது

அறிவு: இனி ஞான உணர்வொடு புணர முயல்வாய் - புணர முயல்வாய்.

மனம்: ஞான உணர்வொடு புணர வழி புகல்வாய் எனக்கு புகல்வாய்.

அறிவு: இந்தா மயில் வாகனர் சீட்டும் (திருப்புகழ்) சிவ நீறும்.

மனம்: திருப்புகழால் ஞான உணர்வொடு புணர்ந் தேன் - நான் உணர்ந்தேன்.

அறிவு: நீ சகல துக்கமுமற, சகலசற்குணமும் வர தரணியில் புகழ்பெற, தகைமை பெற்று, அவன் பொற்சரணம் எப்பொழுதும் நட்பொடு நினைத்திட அருள் பெறுவாய் - மெய்ச்சிந்தை வர அவன் தரிசனம் பெறுவாய்.

நாம் இருவரும் இனி சேர்ந்து முருகனை துதிப் போமா? மனமும் அறிவும் இணைந்து முருகனைத் துதிக்கின்றான்.

பிறவியலையாற்றினிற் - புகுதாதே
பிரகிருதிமார்க்கமுற்று - அலையாதே
உறுதிகுருவாக்கியப் பொருளாலே
உனது பதகாட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளானே
அறிவுளறிவாக்க குணக் கடலோனே
குறுமுனிவன் ஏத்துமுத் தமிழோனே!
குமரகுருகார்த்திகைப் பெருமாளே! (திருப்புகழ்)

உருவாய் அருவாய் உளவாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே
(கந்தர் அனுபூதி)

வள்ளிமலை சுவாமிகளாம் குருநாதர் இவ்வாறு பாடிக் காண்பித்ததும், பாம்பாட்டியின் மகுட வாசிப்பில் கட்டுண்ட பாம்பைப் போல் சிறிது நேரம் வியப்பினால் செயலற்றுப் போனேன்.

இப்பாடலில் வரும் சிற்றின்ப வர்ணனைகள் அனைத்தும் வேசியரை குறித்து பாடப்பட்டதென உணர்தல் வேண்டும்.

இதனை அடியார்கள் யாவரும் உணரும் பொருட்டு வள்ளிமலை சுவாமிகளின் கட்டளைக்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ளது.

சிற்றின்ப வழி இனி மனம் செல்ல முற்பட்டாலும், அதனை ஞானநல் அறிவால் தடுத்து முருகப் பெருமானின் திருவடிகள் பற்றி உய்ய முற்பட்டல் வேண்டும். அதுவே இத்திருப்புகழ்வழி வள்ளிமலை சுவாமிகள் நமக்கு உணர்த்தும் ஞானப்பாடமாகும்.


★★★

# "மழை வேண்டும்" தைப்பொங்கல்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

'தை' வருமுன் மழை பொழியும்
தரணியெலாம் பயிர் செழிக்கும்,
'தை' தந்த அறுவடையால்,
தானியங்கள் மலைமலையாய்,
'தை' காணும் உழவரெலாம்,
தனைச் சார்ந்தோர் நன்றி சொலும்,
'தை'ப் பொங்கல் மழை வேண்டும்
"தனிப் பொங்கல்" இனிக் காண்போம். (1)

மழையின்றி பயிரேது?
மக்களுக்கு உணவேது?
மழைவேண்டிப் பொங்கலிட்டால்,
மனமிரங்கும் மழைவானம்;
மழைபொய்க்கா திருக்க வேண்டும்
மழைப் பொங்கல் நாம் இட்டால்,
தழைக்கின்றப் பயிரினங்கள்,
தழைக்கவழி இனிபிறக்கும்! (2)



நீரோடும் பெரும்நதிகள்
நிரந்தரமாய் இணைக்க வேண்டும்,
தேரோடும் கோயில்குளம்
தெண்ணீரால் நிரம்ப வேண்டும்,
ஊரெல்லாம் கண்மாய், குளம்,
ஓங்கிநீர் வழிய வேண்டும்
பாரெல்லாம் மழைபொழியப்
பால்பொங்கல் படைப்போம் நாம். (3)

வருணனை நாம் மறந்ததினால்,
வந்ததுன்பம் இனிமறவோம்,
வருணனுக்குப் பொங்கலிட்டால்
வளம்பெருக நீர்பொங்கும்

பருவமழை பொய்க்காமல்,
பார்முழுதும் நீர்பெருக,
தருமநிலை தவறாமல்
தனிப்பொங்கல் இனிக்காண்போம். (4)

புத்தரிசி பாலோடும்
பொங்கிவர வெல்லமிட்டும்,
தித்திக்கும் கரும்போடும்
தேன்சேர்ந்து வருணதேவன்,
எத்திக்கும் மழைபொழிய,
இன்பொங்கல் படைத்துவிடில்,
திக்கெட்டும் மழைபொழியும்,
செல்வவளம் சேர்ப்பானே. (5)

(முற்றும்)

# ஆரூர் திருக்கோயிலும், பதினெண் இசைக்கருவிகளும்

— எம். விஜயரங்கதுரை, எம்.ஏ., எம்.எல்., பி.ஜி.டி.பி.எம்.
உதவி ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை,
உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம், திருவாரூர்

*(முன் தொடர்ச்சி)*

### *11. வாங்கா*

ஆரூர் திருக்கோயில் இசை மரபு வரலாற்றில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு அரிய இசைக்கருவி யாகும் இது பித்தளை உலோகத்தினாலான ஒரு கஞ்சக் கருவியாகும். இது ஒரு மோட்டார் வாகனத் தின் ஒலிப்பான் போன்ற அமைப்பில் உள்ளது. (ஆங்கி லத்தில் ட்ரெம்பட் (Trumpet) எனப்படும் இசைக் கருவியை ஒத்தும் உள்ளது) இவ்விசைக் கருவி, இரண்டு மூன்று மடிப்புகளாக வளைந்து காணப்படு கிறது. ஒவ்வொரு மடிப்பும் (வளைவும்) 6 செ.மீ. வரை நீளம் உள்ளது. வாயில் வைத்து ஊதும் பகுதி சிறியதாகவும், முனைப்பகுதி அகன்று புனல் வடிவம் உடையதாகவும் உள்ளது. வாய்ப்பகுதி சுமார் 2 செ.மீ சுற்றளவு உள்ளது.

திருவாரூர் திருக்கோயிலில் சுவாமி தேரோட்டத் திலும் திருவிழாக் காலங்களிலும் பாலாலயம் மற்றும் கும்பாபிஷேக காலங்களிலும் இவ்விசைக் கருவி இசைக்கப்படுகிறது. இவ்விசைக் கருவி திருவாரூர் திருக்கோயில் இசை மரபில் குறிப்பிடத்தக்க ஒரு அரிய இசைக் கருவியாகும்.

### *12. புல்லாங்குழல்*

புல்லாங்குழல் என்று அழைக்கப்படும் துளைக் கருவி ஆரூர் திருக்கோயிலின் இசை மரபில் காணப் படும் ஒரு அரிய இசைக் கருவியாகும். திருவாரூர் திருக்கோயில் மாலை நேர வழிபாட்டிலும் (சாய ரட்கைஷ) திருவாரூர் திருக்கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளிலும் இசைக்கப்படுகிறது. திருவாரூர் திருக்கோயில் தென்னவாசல் எனப்படும் ஸ்ரீ தியாக ராஜர் சன்னதி தென்புறம் புல்லாங்குழல், வீணை, துத்தி போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

### *13. வீணை*

திருவாரூர் திருக்கோயில் இசை மரபில் காணப் படும் வீணை ஒரு வித இசைக் கருவியாகும். இது ஒரு நரம்பு கருவியாகும், இது மற்ற மரபு வீணை களைப் போலவே காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. தென்னவாசல் எனப்படும், ஆரூர் ஸ்ரீ தியாகராஜர் சன்னதிக்கு தென்புறம் அமைந்துள்ள பகுதியில் ஸ்ரீ தியாகராஜர் வழிபாட்டில் இவ்விசைக் கருவி, புல்லாங்குழல், துத்தி போன்ற இசைக் கருவிகளுடன் இசைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது, வீணை தண்டின் நீளம் மூன்று சாண் வரை உள்ளதாக கூறப் படுகிறது.

### *14. துத்தி*

திருவாரூர் திருக்கோயில் பதினெண் இசைக்கருவி களுள் துத்தி ஒரு அரிய இசைக் கருவியாகும். இது ஒரு காற்றுக் கருவியாகும். (சுருதி கருவி). இது ஒரு சிறிய ஊது குழாய் வடிவத்தில் உள்ளது. திருவாரூர் திருக்கோயில் ஸ்ரீ தியாகராஜ சுவாமி வழிபாட்டில் (சாயரட்கைஷ) தென்னவாசல் எனப்படும் ஸ்ரீ தியாக ராஜர் சன்னதியின் தென்புறம் புல்லாங்குழல், வீணை, மற்றும் துத்தி போன்ற இசைக்கருவிகள் இசைக்கப் பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

### *15. சல்லரி அல்லது ஜல்லரி*

திருவாரூர் திருக்கோயில் இசை மரபில் காணப் படும் மற்றுமொரு இசைக்கருவி ஜல்லரி அல்லது பெரியதாளம் ஆகும். இவ்விசைக்கருவி வெண்கல உலோகத்தினால் ஆனது. தட்டு போன்ற இரண்டு

அமைப்புகளைக் கொண்டது. தட்டின் மையத்தில் குவிழ்ந்துள்ளது. (சிறிய குமிழ் வடிவத்தில்) இதன் எடை ஒன்றரை கிலோ (1½ கிலோ) உள்ளது. வெண் கலத்தினால் ஆன பகுதி சற்று நீண்டு காணப்படு கிறது. இவ்விசைக் கருவியின் இரண்டு பகுதிகள் மேல் பகுதியினை கொண்டு அடிப்பகுதியில் தட்டி ஒலி, எழுப்பப்படும் போது (அரிய இசை) இனிமையான ஒலி கேட்கிறது. இவ்விசைக் கருவி திருவாரூர் திருக்கோயில் முதல் பிரஹாரத்தில் ஏனைய இசைக் கருவிகளுடன் விழாக் காலங்களிலும், சுவாமி வழிபாட் டிலும் இசைக்கப்படுகிறது.

### 16. டக்கா அல்லது டவண்டை

டக்கா என்ற இசைக் கருவி திருவாரூர் தந்த பதினெட்டு இசைக் கருவிகளில் ஒன்றாகும். இது ஒரு தோல் கருவி. இது (மாட்டுத் தோலினாலானது) தோல் வார்களை கொண்டு இணைக்கப்பட்டுள்ளது. இவ்விசைக் கருவியின் ஒரு மூளையில் ஒரு சிறிய வட்டக் கயிறு கட்டி இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் கயிற்றைக் கொண்டு கையில் பிடித்து மர கம்பால் அடித்து ஒலிக்கப்படுகிறது. திருவாரூர் ஸ்ரீ தியாக ராஜர் புறப்பாட்டிலும் திருவாரூர் ஆழித்தேர் திருவிழா நாளிலும் இவ்விசைக் கருவி இசைக்கப்படுகிறது.

### 17. கொக்கரை

திருவாரூர்திருக்கோயில் இசைமரபில் காணப் படும் மற்றுமொரு அரிய இசைக்கருவி கொக்கரை எனப்படும் உலோகக் கருவியாகும். (கஞ்சக்கருவி). இது பித்தளை உலோகத்தினால் ஆனது. இது மாட்டுக் கொம்பு போன்ற வடிவத்தில் அமைந்துள்ளது. (அரை வட்ட வடிவத்தில் அமைந்துள்ளது). இவ்விசைக் கருவி சுமார் ஒன்றரை டி நீளம் உள்ளது. வாயில் வைத்து ஊதும் பகுதி, சுமார் ஒரு செண்டி மீட்டர் அளவு மேல் சுற்றளவு உள்ளது. மேல் பகுதி சுமார் பத்து செண்டி மீட்டர் (10 செ.மீ.) சுற்றளவு உள்ளது. இவ்விசைக் கருவி திருவாரூர் ஆழித்தேர் திருவிழாவின் போதும் ஸ்ரீ தியாகராஜர் புறப்பாட்டின் போதும் இசைக்கப் படுகிறது.

### 18. சேமங்கலம்

திருவாரூர் தந்த இசைமரபில், பதினெட்டு அரிய இசைக்கருவிகளில் சேமங்கலம் ஒன்றாகும். வட்ட வடிவதட்டு போன்ற அமைப்பை கொண்டுள்ள இவ்விசைக்கருவி, பித்தளை அல்லது வெண்கரல உலோகத்தினால் ஆன இசைக்கருவி ஆகும். இவ் விசைக்கருவியில், ஒரு மூளையில் ஒரு சிறிய கயிறு கோர்க்கப்பட்டுள்ளது. இதன் சுற்றளவு, சுமார் ஒரு அடி (1 அடி) வரை உள்ளது. இதன் எடை சுமார் ஒன்றரை கிலோ உள்ளது. ஒரு மரக் கட்டையினை கொண்டு சேமங்கலத்தில் தட்டி ஒலி எழுப்பப்படு கிறது. பொதுவாக, சேமங்கலம் திருவாரூர் திருக் கோயில் மோதி இழுக்கும்பொழுது (வாஸ்து பரிகாரம்) ஒலிக்கப்படுகிறது.

### II. ஆரூர் திருக்கோயில் தேவாசிரிய மண்டப ஓவியங்களில் பதினெண் இசைக்கருவிகள்

திருவாரூர் திருக்கோயில் ஆயிரங்கால் மண்ட பத்தில் ஸ்ரீ தியாகராஜர் புறப்பாட்டில் இசைக்கப் படும் இசைக் கருவிகள் பற்றிய ஓவியங்கள் காணப்படுகின்றன.

### III. திருவாரூர் தேவாரத்தில் போற்றப்படும் திருவாரூர் திருக்கோயில் இசைக்கருவிகள் :

ஆரூர் தேவாரத் திருப்பதிகத்தில் கீழ்க்கண்ட வாறு திருவாரூர் இசைக்கருவிகள் பற்றி குறிப்புகள் காணப்படுகிறது.

''திருமணியைத் தித்திக்கும் தேனைப்பாலைத்
தீங்கரும்பின் சுவையிற்
தெளிந்த தேறல் குருமணியைக் குழன்
மொந்தை தாளம் வீணை கொக்கரையின்
சச்சரையின் பாணியானைப் பருமணியை
பவளத்தைப்
பசும்பொன் முத்தை பரு பதத்திலருங் கலத்தைப்
பாவந் தீர்க்கும் அருமணியை
யாரூரிலம் மான்றன்னையறியாதடி நாயனேயர்த்த
வாறே'' என்றும்,

(சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது
திருவாரூர் தேவார பதிகம் (திருமுறை),
மத்த மழவம் இயம்பும் (79-85)
ஏழ் இசை ஏழ் நரம்பின் ஓசையை
கொடு கொட்டி கொண்டது ஓர் கையான் (6549)
கங்கு ஒத்த நிற்று எம் சதுரா (6582)
கொண்டது ஓர் வீணையினான் (4865)
நில வெண்சங்கும் பறையும் ஆர்ப்ப நிற் கில்லாப்
பலரும் கிட்ட கல்ல வடங்கள் ஆர்ப்ப (4881)
சங்கு ஒலிப்பித்திடுமின் (5761), என்றும்
கொக்கரை குழல், வீணை கொடு கொட்டி (5301),
என்றும்

ஆரூர் இசை மரபினை போற்றிப் பாடப்படுகிறது.


இத்தேவார திருப்பதிகங்களின் வாயிலாகவும் ஆரூர் இசைக்கருவிகள் ஆயிரமாண்டுகளுக்கு மேலாக ஆரூர் ஸ்ரீ தியாகராஜருக்கு மட்டுமே அர்ப் பணிக்கப்பட்டு வரப் பெற்றுள்ள விபரம் அறியப் படுகிறது.




கொக்கரை



வீணை



கொடுகொட்டி



நட்டுவதானம்

## ஆரூர் கோயில் சிற்பங்களில் இசைக் கருவிகள்


ஆரூர் திருக்கோயில் ஸ்ரீ கன்னி மூல கணபதி சிற்பம் இசைக்கருவியுடன் காணப்படுகிறது. ஸ்ரீ தியாக ராஜர் சன்னதியின் தென்புறம் சிவகணம் நாயனம் வாசிப்பதாக சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. திருவாரூர் திருக்கோயில் கோபுரங்களில் காணப்படும் சிற்பங்களிலும், திருவாரூர் கோயில் இராஜ நாராயண மண்டபத்தில் காணப்படும் சங்கு வாத்தியம் இசைக்கும் பூதகண சிற்பங்களிலும் ஆரூர் இசைக்கருவிகள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், ஆரூர் திருக்கோயில் இசைக்கருவிகளின் தொன்மையும் இதனால் அறியப்படுகிறது.


## முடிவுரை

இன்று, திருவாரூர் திருக்கோயிலில் பாரிநாயனம், சுத்தமத்தளம், பஞ்சமுக வாத்தியம், சங்குவாத்தியம், திருச்சின்னம், எக்காளம், வாங்கா, கொடுகொட்டி, போன்ற இசைக்கருவிகள், ஆரூர் திருக்கோயில் இசை மரபில் நிலைத்து நிற்கின்றன. தன்னிகரில்லா தனித் தன்மை பெற்று திகழும் ஆரூர் திருக்கோயில் இசை மரபை மீண்டும் ஆரூர் திருக்கோயிலில் தொடர்ந்து நீட்டிக்க அரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு எல்லாம் வல்ல திருவாரூர் தியாக ராஜ பெருமான் நமக்கு அருள்புரிவாராக.

திருச்சிற்றம்பலம்


★★★





புரசை அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயிலில் 14-1-04 அன்று திருப்பாவை விழாவும், ஆண்டாள் திருக்கல்யாணமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் திருப்பாவைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு முன்னாள் நீதியரசர் வேணுகோபால் அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள். செல்வி சக்தி ஐஸ்வர்யா அவர்களின் "ஆண்டாள்'' நாட்டியம் சிறப்புற நடைபெற்றது. திருவாளர் எம். ஈஸ்வரப்பன் தலைமை தாங்கிய இவ்விழாவில் "திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் வாழ்த்துரை வழங்கினார்கள். திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் திருமிகு எம். நடராசன் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

பதிவு எண். TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451





சென்னை தீவுத்திடலில் சுற்றுலாப் பொருட்காட்சியில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ள நம் துறையின் எழில்மிகு அரங்கத்தை, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், நம் ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்களும் பார்வையிடுகிறார்கள். கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பிஎஸ்.சி. பிஎல். அவர்களும், சென்னை இணைஆணையாளர் திருமிகு ப. இராஜா பிஎஸ்.சி., பிஎல். அவர்களும் உடன் உள்ளார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் சாலை, சென்னை - 600 014.